உ
சிவமயம்

தஞ்சாவூர் ஸ்ரீ பால்சுவாமி மடம்
வரலாற்றுச் சுருக்கம்
&
மடாதிபதிகளின் வாழ்க்கை வரலாறு



இந்த வரலாறு புத்தகம்
9-வது மடாதிபதி
ஸ்ரீ சுவாமி அகிலானந்த அவர்களின்
விருப்பப்படி வெளியிடப்பட்டது.

7 - 1 - 1992.

கைவல்லிய நவநீதம் - சந்தேகந் தெளிதற் படலம்

பொருள்:- இப்பிரம்ம ஞானமானது உதிப்பது எவ்வண்ணமென்று கேட்பாயாகில் இடையறுத ஆன்ம விசாரணையால் வரும் விசாரணையாவது யாது எனில், மனம் முதலிய தேகத்திலிருக்கின்ற இந்த நான் யாவன்? சித்தென்பது யாது? சடமென்பது யாது? சித்தும் சடமும் ஆகிய இரண்டும் ஒன்றாகக் கூடப்பெற்ற பந்தம் யாது? அதனை விடப் பெற்ற முத்தி யாது? என விசாரித்தால் விசாரணையென்று அறிந்து கொள்வாய். -கைவல்யம்

பொருள்:- வீட்டிற்குள் வைத்த வஸ்துக்களை வைத்தவிடந் தெரியாது மறந்தவன் நூறாண்டு துக்கித்தாலும் முன் வைத்த விடத்தை ஞாபகஞ் செய்து அறிந்தபின் அவைகள் கிடைக்கும். அதைப்போல, இந்த நிருமலமான ஆன்ம ஞானமும் துக்கத்திற்குக் காரணமாகிய தனது அறியாமையைப் போக்கும் தனது அறிவினால் தரிசிக்கப்படாமல், கனமான கன்மங்களை அநேகயுகஞ் செய்தாலுங் காணப் படுமோ? காணப்படாது. -கைவல்யம்

ஸ்ரீமத் பகவத்கீதை

மத்கர் மக்ருன் மத்பரமோ மத்பக்த: ஸங்கவர்ஜித:
நிர்வைர: ஸர்வபூதேஷு ய: ஸமாமேதி பாண்டவ 11:55

கருத்து:- பாண்டவா எனக்காகக் கர்மம் செய்கின்றவனும், என்னைக் குறியாகக் கொள்கின்றவனும், என்னிடத்து பக்தி பண்ணுபவனும், பற்றற்றவனும், எல்லா உயிர்களிடத்தும் வெறுப்பற்றவனும் எவனோ அவன் என்னை அடைகிறான்.

ச்ரேயோ ஹிஞானமப் யாஸாத் ஞானாத்த்யானம் விசிஷ்யதே
த்யானாத் கர்மபலத்யா கஸ்த்யாகாச் சாந்திரனந்தரம் 12:12

கருத்து:- அப்பியாசத்தைவிட ஞானம் சிறந்தது. ஞானத்திலும் தியானம் மேலானது தியானத்தைக் காட்டிலும் கர்ம பலத் தியாகம் உயர்ந்தது தியாகத்தினின்று விரைவில் சாந்தி வருகிறது.

உ
சிவமயம்

தஞ்சாவூர் ஸ்ரீ பால்சுவாமி மடம்
வரலாற்றுச் சுருக்கம்
&
மடாதிபதிகளின் வாழ்க்கை வரலாறு

வரலாற்று தொகுப்பு ஆசிரியர் :
புலவர் திரு து. கலியமூர்த்தி அவர்கள்
தமிழாசிரியர், அருள்நெறி உயர்நிலைப்பள்ளி,
அம்மன்பேட்டை - 613 205.

இந்த நூலுக்கு நிதிஉதவி அளித்தவர்கள்
VICTORY TRADERS,
CLOTH MERCHANTS,
93, POWER HOUSE ROAD, ERODE - 638 001

இந்த வரலாறு புத்தகம்
9-வது மடாதிபதி
ஸ்ரீ சுவாமி அகிலானந்த அவர்களின்
விருப்பப்படி வெளியிடப்பட்டது.
7 - 1 - 1992.

 [இலவசம்

உ

சிவமயம்



ஸ்ரீ பால் சுவாமிகள்

ஸ்ரீ பால் சுவாமிகள் வரலாறு

ஊரும் பிறப்பும் !

பாரிற் சிறந்தது பரத கண்டம். இக்கண்டத்துள் சீரும் சிறப்பும் மிக்க தமிழ் நாட்டின் நெற்களஞ்சியம் என வழங்கப்பெறும் தஞ்சை மாநகரில், பாபநாசம் என்னும் சிற்றூரில் ஏறக்குறைய நூற்று எண்பத்தைந்து ஆண்டுகட்கு முன் பூவைசியர் மரபில் மேளத் தொழிலாளர் குடும்பத்தில் பிறந்தவரே ஸ்ரீ பாற்சுவாமிகள். இவர் பெற்றோர் நாராயணசாமி எனப்பெயரிட்டு அழைத்தனர். இவருடைய மனமோ குலத்தொழிலில் ஈடுபடாது, பற்றற்ற நிலையில் இறைவனைப் பற்றி நின்றது ஆன்மஞான சொற்பொழிவுகள், புராணச் சொற்பொழிவுகள் நிகழுமிடம் சென்று தன் ஆன்மஞான முயற்சியை வளர்த்துக் கொண்டார்,

துறவியாதல் :

ஒரு நாள் வழக்கம் போல தஞ்சையில் நடந்த ஆன்மஞானச் சொற்பொழிவுக்குச் சென்று திரும்பிய அவர், மறு நாள் தான் சென்ற மேளக்கச்சேரியில் மனம் ஈடுபடாது ஆன்ம நிட்டையில் பதிந்தபடியால் தாளம் சரியாக அடிக்கவில்லை, நாதசுரம் வாசிப்போர் அவரை இகழ்ந்த போது, அவரோ ஒத்துக்குழல் ஊதுவதாகக்கூறி, அவர்களும் சம்மதிக்க ஸ்ரீ சுவாமிகள் அதிலும் மனம் ஈடுபடாது ஆன்ம நிட்டையில் ஈடுபட்டதால் நாதசுரம் வாயைவிட்டு நழுவி மார்பில் விழுந்திட, அது தானாகவே மூன்று மணி நேரம் சரியாக ஒத்துக்குழல் ஊதியது. ஊர் மக்கள் அனைவரும் இதனைக் கண்டு போற்றினர். ஸ்ரீ பால் சுவாமிகள் கண் திறந்தவுடன அதுவும் நின்றது நாதசுரம் வாசிப்போரும் ஊர் மக்களும் அவரைப் போற்றி பாராட்டினர்.

இதன் பிறகு சுவாமிகள் தம் இல்லத்திற்குச் செல்லவில்லை. திருக்கோவில்களுக்குச் சென்று இறைவழிபாடு செய்து, நிட்டையில் இருந்தோடு, பல இடங்களிலும் சுற்றித் திரிந்தார். ஒரு குருவையடைந்து நிர்விகல்ப சமாதிக்குரிய அருளுரையைப் பெறவேண்டுமென்பதை தன் நோக்கமாகக் கொண்டு, பல சிவப்பதிகட்கும் சென்று சிவ வழிபாடு செய்து கொண்டிருந்தார். அது சமயம் திருவலஞ்சுழியில் தியானம் செய்துகொணடிருந்த போது துறவியொருவர் வர-அவரைக் குருவாகக் கொண்டு துறவறம் பெற்றார். எண்வகையாற்றலைப் பெற்றார்.

ஆகாய கமனம் :

விண்வழியே செல்லும் ஆற்றல் ஆகாய கமனம், ஸ்ரீ சுவாமிகள் ஓரிடத்தில் ஆடையை மடித்து வைத்து நிட்டையில் அமர்வார். கண் திறந்த போது அவர் விரும்பிய ஊரில், இடத்தில் இருப்பார்கள். இவ்வாறு தமிழகம் முழுவதும் சஞ்சரித்ததாக அன்பர்கள் கூறுகிறார்கள்.

நீர்ப்பெருக்கில் நிட்டை :

ஒரு நாள் வடலாற்றின் உட்புறமாக அரசமரத்தடியில் சுவாமிகள் நிட்டையில் இருதங்போது ஆற்றில் குறைவாக வெள்ளம் அதிகரித்து சுவாமிகளை அடித்துச் சென்றது. சுவாமிகள் நிட்டை களையவில்லை கண்டவர் அஞ்சினர் சுவாமியின் பெருமையை உணர்ந்தவர்கள் சுவாமிகட்கு ஆபத்து ஏற்படாது என எண்ணி அகன்றனர். மறுநாள் சுவாமிகள் வழக்கம்போல மடத்தில் அமர்ந்திருந்தார்.

குளச்சிறுமை பேசியவர்களும், கள்ளர்களின் கயமையும் :

சுவாமிகள் பொது இடம் ஒன்றில் நிட்டையில் இருந்த போது அவ்வழியே சென்ற ஒருவன் மற்றவனிடம் சாமியாரைத் தெரியுமா? எனக் கேட்க. அவன் அதற்கு, ''மேளக்காரச் சாமியார்தானே? ஒத்து ஊதவும் தெரியாது சாமியார் ஆனவர் தானே: என கேலி செய்தனர். அவர்களுக்கு சற்று நேரத்தில் பேச்சே வரவில்லை. திக்கிதிக்கிப் பேசினர்: சுவாமிகளிடம் மன்னிப்புக் கேட்க அது சரியாகியது.

மற்றொரு நாள், கள்ளர்கள் சிலர் சுவாமிகள் இருந்த திருநீற்றுப் பையைச் சோதித்து விட்டு கேலி பேசியபடியே செல்ல சிறிது தூரம் சென்ற பின் கண் தெரியாது சப்பாத்திமுள் புதரின் மீது விழுந்து உடல் முழுவதும் முள் தைத்து விட்டது.

ஆற்றைக் கடந்தது :

ஒரு நாள் குளமங்கலம் செல்ல வெண்ணாற்றில் ஓடம்ஏறி அக்கரை செல்ல விரும்பிய சுவாமிகளிடம், காசில்லை என ஓடக்காரன் ஏற்றிச்செல்ல மறுத்துவிட்டுச் செல்ல, அக்கரைக்கு ஓடத்தில் சென்றவர்கள், அங்கு தமக்கு முன்பாக சுவாமிகள் சென்று கொண்டிருப்பதை ஓடக்காரனிடம் காட்டினர். அவனும் சுவாமிகளின் பெருமையுணர்நது தன் குற்றத்தைப் பொருத்தருளும்படி வேண்டினான்,

பால்சாமி :

தில்லை மரம் என்பது மரவகைகளில் ஒன்று. இம்மரத்தின்பால் யோகிகள் தவிர மற்றவர்கள் உடலில் பட்டால் அந்த இடம் வெந்து போகும், இம் மரம் அந்நாளில் வேதாரண்யம் கோடியக்காட்டில் மிகுதியாக இருந்ததாம். அப்பால் புசிப்பதால் காயசித்தியும், ஆன்மநிட்டை சமாதி யோகத்தில் அமர்ந்திருக்கும் நிலையும் ஏற்படும் என்று கருவூரார் வாதாகாவியம் என்னும் நூலில் கூறியிருப்பதால் அதை அறிந்த ஸ்ரீ பால் சுவாமிகள் அந்தப் பாலை தினமும் கோடியக்காடு சென்று அருந்தி வந்தார். ஆகாய கமனம் அதற்குப் பயன்பட்டது. அன்பர்கள் அப்பாலைக் கறந்து வைத்துக்கொண்டு காத்திருப்பர். தில்லம்பால் சாப்பிட்டதாலேயே சுவாமிகட்கு ஸ்ரீ பால் சுவாமிகள் என்னும் நாமம் வந்தது.

இராமசாமி பாதம்

திருமறைக் காட்டிலிருந்து கோடியக்கரைக்குச் செல்லும் வழியில் ஒரு பெரிய மண் மூட்டு இருக்கிறது. அதற்கு இராமசாமி பாதம் என்று பெயர். இராம பிரான் இலங்கையிலிருந்து அவ்வழியாக வந்தபோது, காலில் படிந்திருந்த மண்ணை உதறியதால் அம்மூட்டு உண்டாயிற்று என்றும் அதனால் 'இராமசாமி பாதம்' என்றும் பெயராயிற்று சுவாமிகள் அம் மூட்டின் மீது ஒரு நாள் அமர்ந்து நிட்டையில் ஈடுபட்டிருந்த போது, பால் கொணடுவந்த அன்பர்கள் சுவாமிகள் அங்கிருப்பதை அறிந்து பாலுடன் வந்தபோது சுவாமிகளைச் சுற்றி ஏழு நல்ல பாம்புகள் படமெடுத்து ஆடிக்கொண்டிருந்ததால் அவர்கள் அஞ்சி அகன்றனர்.

கடித்த பாம்பு மாண்டது.

ஒரு சமயம் பாபநாசம் சாத்தனூரிலிருந்து அன்பர்களோடு சாலையில் வந்துகொண்டிருந்த போது சுவாமிகளின் காலில் இரத்தம் வடிந்ததைக் கண்ட அன்பர்கள் அதற்கு காரணம்கேட்டனர். சுவாமிகள் ஓரிடத்தைக் குறிப்பிட்டு அங்கு போய்ப்பார்க்கச் சொல்ல - அங்கு ஒரு நல்ல பாம்பு இறந்து கிடந்தது சுவாமிகளைக் கடித்ததால்தான் அவ்வாறு அது மாண்டது என்று அறிந்தனர்.

காசுகள் கற்களானவை ;

சுவாமிகள் ஒரு நாள் திருவையாறு ஐயாறப்பர் கோவில் கொடி மரத்தின் தென்பக்கம் அமர்ந்து நிட்டை செய்தனர். காலையில்

அமர்நதவர் நண்பகல் வரை எழவில்லை. அவ்வழியே சென்ற அன்பர் ஒருவர் சுவாமிகளின் முன்பு ஓரணா வைத்துவிட்டுச் செல்ல நிறைய பேர் அவ்வாறே காசுகளைப் போட்டுவிட்டுச் செல்ல நிறைய சேர்ந்து விட்டது சுவாமிகளின் நிட்டை கலையவில்லை. தீயவன் ஒருவன் அதைக் கவனித்து அக் காசுகளைத் திருடிச் சென்று முடிச்சை அவிழ்த்த போது அது கூழாங்கற்களாக மாறியதாம்.

நீற்றால் நோய் போக்கல் :

திருவைங்தெழுத்தை உரைத்து திருநீற்றைக் கொடுத்தால் நோய்கள் நீங்கும் என்பர். சுவாமிகள் மீது நம்பிக்கை கொண்டோர் சிலர் அவரிடம் வருவர். அவரிடம் வந்தவர்களுக்கு திருநீற்றைக் கொடுத்து உன்னுடைய பிணி தீர்ந்து விடும்.போ என்பார். அவ்வாறே நோய் நீங்கும்.

ஒரு நாள் வயிற்று வலியால் தொல்லைப்பட்ட ஒருவன் சில காலம் வருந்தி இறுப்பதைவிட இப்பொழுதே இறந்து விடுவது மேல் என்று முடிவு செய்து தூக்குப்போட்டு இறக்க ஒரு மரத்தின் மீது ஏறி-னான். அதைப்பார்த்து பக்கத்து வீட்டுக்காரர் அவனைத் தடுத்து ஸ்ரீ சுவாமிகளிடம் அழைத்துவர - சுவாமிகள் அவன் வயிற்று வலியைப் போக்கினார்.

பேயை ஓட்டிய பெருமை :

கோடியக் காட்டில ஒரு நாள் சுவாமிகள் நிட்டையில் இருந்த போது சிலர் ஒரு பேய்பிடித்த பெண்ணை அழைத்து வந்தனர். அவள் தலைவிரி கோலமாக ஆடிக்கொண்டிருந்தாள். திருநீறை ஊதியதும் அப்பெண் பேயிடமிருந்து விடுதலை பெற்றால்.

ஒரு சமயம் கோடியக் காட்டில் குவித்து வைககப்பட்டிருந்த உப்புக் குவியல் மீது சுவாமிகள் நிட்டையில் அமர்ந்திருந்தார் உப்பளக் காவல்காரன் யாரோ கள்ளன் எனக் கருதி 'அடே யாரங்கே? என்றபடி ஓடிவர சுவாமிகள் மாயமாய் மறைந்து விட்டார். மறுநாள் உப்புக்-குவியல் கற்களாக இருந்ததாம்.

வறியவன் வாழ்வு பெற்றது :

அகத்தியான்பள்ளி என்னும் ஊரிலிருந்த எளிய்வன் ஒருவன் சுவாமிகளிடம் தன் வறுமை நிலையை நீக்கி அருள்புரிய வேண்டினான சுவாமிகள் மறுமொழி கூறாது திருநீறு கொடுத்தனுப்பினார். அன்று முதல அவனுடைய வாழ்வு சிறப்புற்றது.

அமாவாசை விரதக் கூத்து :

வல்லுண்டான்பட்டி அன்பர் ஒருவர் ஓர் அமாவாசையன்று சுவாமிகட்கு சுவையாக அமுது படைக்க எண்ணி சிறப்பாக சமையல் செய்து வைத்திருந்தார் அதே போல் குருங்களூர், கொல்லான்கரை, பூண்டி, வேதாரண்யம், அகத்தியான்பள்ளி முதலிய பலவிடங்களில் அன்பர்கள் சமையலுடன் காத்திருந்தனர். பதினோரு மணிவரை சுவாமிகளைக் காணாது வருந்தினர். சரியாக 12 மணிக்கு அனைவர் இல்லத்திலும் சுவாமிகள் உணவு உண்டார்கள். பின்னர் அவர்கள் ஒரு நாள் சந்தித்த போது இச்செய்தியறிந்து வியந்தனர்.

பேதைமை என்பது மாதர்க்கணிகலம் :

ஒரு நாள் அம்மாப்பேட்டை என்ற ஊரில் தெரு வழியாகவந்து-கொண்டிருந்த சுவாமிகளை மதியாது, வீட்டு வாசலில் ஒரு பெண் கூட்டிக்கொண்டிருந்தாள். சுவாமிகளைப் பற்றி அறியாதவள் அவள். அப்பெண் விலகவும் இல்லை: கூட்டுவதை நிறுத்தவுமில்லை. மறு விநாடி ஒரு சுழல்காற்றடித்து தெருவில் கிடந்த குப்பைகளை கூட்டிக் கொண்டிருந்த இடத்தில் தள்ளிவிட்டுப் போயிற்று.

சிற்றுண்டி வழங்கியமை :

ஸ்ரீ பால் சுவாமிகள் தற்போது மடாலயம் அமைந்திருக்கும் தோட்டத்தில் தனது வாழ்நாளின் பிற்காலத்தில் தங்கி நிட்டை சாதித்துக்கொண்டிருந்தனர். அந் நாளிள் கரந்தை த. வே. உமா-மகேஸ்வரன் பிள்ளை சிறுவராக விளங்கினார். அவர் தன் நண்பர்-களுடன் சுவாமிகளிடம் வருவதுண்டு. அவர்களுக்கு அவர்கள் விரும்பிய திண்பண்டங்களைச் சுவாமிகள் தம் தவ வலிமையால் கொடுப்பார்கள்.

சுவாமிகள் தம்மை யார் எங்கே அழைத்தாலும் அவர்களிடம் தாம் வருவதாகக் கூறி அவர்களை அனுப்பிவிட்டு. அவர்களுக்கு முன் பாக அழைத்த இடத்தில் இருப்பார்கள்:

கூமுண்டல் :

வல்லுண்டான் பட்டியில் மூதாட்டி ஒருவர் ஸ்ரீ பால் சுவாமி களிடம் அளவுகடந்த அன்புகொண்டிருநதார். அவர் விரும்பியபோ-தெல்லாம் சுவாமிகள் அவரது இல்லம் சென்று கூமுண்டுவிட்டு மறைந்து விடுவார்கள்.

இவ்வாறு சுவாமிகள் ஓரிடத்திலும் நிலையாக இருப்பதில்லை பல இடங்களிலும் சுற்றித் திரிந்து கொண்டிருந்தார்.

நீதி மன்றம் சென்ற புதுமை :

ஒரு சமயம் குண்டூர். சாத்தனூர் ஆகிய இடத்தில் இருந்தவர்களுக்குள் நாகப்பட்டினம் நீதி மன்றத்தில் வழக்கு நடைபெற்றது. அவ் வழக்கு சுவாமியின் அன்பர்கட்குத் தோல்வியாக முடியும் போல் இருந்தது. சுவாமிகளுடைய அன்பர்கள் சுவாமிகள் அருள் செய்து நாகை வந்தால் அவர்களுக்கு வெற்றியாக முடியும் எனக் கூறினர். சுவாமிகளும் அவர்களை முன்னே போகும்படிக் கூறித் தான் பின்னர் வருவதாகக் கூறினார். புகைவண்டியிற் சென்ற அன்பர்கள் சுவாமிகள் தங்களோடு வரவில்லையே இனிமேல் எப்படி வரமுடியும்? என வருத்தத்துடன் செல்ல, சுவாமிகளோ ஆகாய கமனம் மூலம் நாகை சென்று வழக்கறிஞரைப் பார்த்து பேசிவிட்டு, நீதி மன்றத்தில் ஓரிடத்தில் அமர்ந்திருந்ததைக் கண்டு வியந்தனர். வழக்கு அவர்களுக்கு வெற்றியாக அமைந்தது.

மக்கட் பேறு :

சுவாமிகள் பூண்டி, விஞ்சைராயர் வீட்டில் சிலநாள் தங்கியிருந்தார். வீரையா வாண்டையாரின் மனைவி சுவாமிகளைத் தன் இல்லத்திற்கு அழைத்துப் பணிவிடை செய்து வந்தார் தமது புதல்வன் அப்பாசாமிக்கு இரு மனைவியர் இருந்தும் குழந்தைகள் இல்லாததை சுவாமிகளிடம் கூறி வருந்தினர் சுவாமிகள் திருநீறு கொடுத்து குழந்தைகள் பிறக்கும் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதன் பிறகு குழந்தை பிறந்தது முதலாவது குழந்தைக்கு சுவாமிகளின் பெயராகிய நாராயணசாமி என சூட்டினார். குல வழக்கப்படி வீரையா எனவும் அழைத்தனர். அன்று முதல் பூண்டி வாண்டையார் குடும்பத்தினர் மடத்தை ஒரு குருபீடமாக ஏற்றுக்கொண்டு வணங்கி வழிபடுகின்றனர்.

பசும்பால் பருகியமை ;

செல்வர் ஒருவருடைய பசுக்கள் பலவற்றை மாடு மேய்ப்பவர்கள் மேய்த்துக்கொண்டிருந்தார்கள். நன்கு பால் கறந்து கொண்டிருந்த அவற்றுள் ஒருபசு மட்டும் பால் கறக்காதது கண்ட செல்வந்தர்

அவர்களை கண்டித்தார். மாடு மேய்ப்பவர்கள் அப் பசுவின் செய்கை-யைக் கருத்துடன் கவனித்தனர். ஸ்ரீ சுவாமிகள் அரசமரம் ஒன்றின் கீழ் மல்லாந்தபடிய படுத்திருந்தார், அப்பசு சுவாமிகளுடைய வாயிற் பொழிந்த புதுமையைக் கண்டு வியந்த அவர்கள் தம் முதாலாளியிடம் அதைத் தெரிவிக்க அவரும் பால் போனாலும் போகட்டும். அவர்கள் சுவாமிகள் இருக்கும பக்கமே போக வேண்டாம் என்று கூறிவிட்டார்.

மறைக்காட்டு கோவிலில் :

கோடியக்காட்டுக்குத் தில்லம்பால் சாப்பிடச் செல்லும் சுவா-மிகள் திருமறைக் காட்டிற்குச் செல்வதுண்டு. ஒரு நாள் மறைக்காட்டு வீரசக்தி விநாயகர் கோவிலில் நிட்டையில் அமர்ந்தார். இரவில் கோ-விலைப் பூட்டும் நேரம் வந்ததும், பூட்டுவோர் சுவாமிகளிடம் சென்று விவரம் கூற அவர் நிட்டையில் இருந்ததால் எத்தகைய மறுமொழியும் கூறவில்லை. எனவே கோவிலைப் பூட்டிவிட்டு சென்றனர். மறுநாள் காலை சுவாமிகள் அங்கில்லை.

மிடுக்கால் நேர்ந்த இடுக்கண் :

ஒரு நாள் ஐயங்கடைத் தெருவழியே சென்று கொண்டிருந்த சுவாமிகள் தன் அன்பர் பெயரைக் கூறி அவர் எங்கிருக்கிறார் எனத் தெரியுமா? என ஒரு பலசரக்குக் கடைக்காரரிடம் கேட்டார். அவரோ காது கேளாதது போல இருந்தார். சுவாமிகள் அமைதியாகத் திரும்பிச் சென்றார். கடைக்காரரின் காது கேட்கவில்லை. பின் மறுநாள் சரியாகியது.

மாரியம்மனாகக் காட்சியளித்தது.

தஞ்சாவூருக்கு அண்மையிலுள்ள மாரியம்மன் கோவிலில் திருவிழா நடைபெற்றது. சுவாமிகள் அங்கு சென்று நிட்டையில் அமர்ந்து விட்டார், கூட்டம் அதிகமாக இருந்தது. அன்பர்கள் அம்ம-னைத் தரிசிக்க முடியாமல் கூட்டத்தில் சுற்றிக்கொண்டிருந்தனர் அப் போது சுவாமிகளைக் கண்டனர். அவரை வணங்கலாம் என்று வந்த போது அவர் இருந்த இடத்தில் மாரியம்மன் இருப்பதைக் கண்டு வியநது நின்றனர்.

அப்பர் குருபூஜையில் நிகழ்ந்தது :

திருவையாற்றில் அன்பர் ஒருவர் அப்பர் குருபூஜைசெய்தார்.

ஏறக்குறைய நூறு இலைகளுக்கு மேல் உணவு படைத்து அடியார்களை உள்ளே அனுப்பினார். அவர்கள் முதல் இலையை விட்டு விட்டு இரண்டாவது இலையிலிருந்து அமர்ந்தனர். அன்பரோ பெரியார் ஒருவரை அனுகி, ''சுவாமிகள் முதல் இலையில் அமரலாமே'' என்று கூற அவரோ ''நான் பெரியவனல்ல'' என்று கூறி மறுத்து விட்டார். வேறு அடியவர் எவரையாவது அழைத்து வரலாம் என வெளியே வந்த போது சுவாமிகள் அங்கே வந்து நேராகச் சென்று முதல் இலையில் அமர்ந்து அமுதுண்டு அருளினார்.

தஞ்சையில் சமாதியடைதல் :

பெருஞ்சித்தராக விளங்கிய சுவாமிகள் இறுதி காலத்தில் பல அன்பர்களுடைய வேண்டுகோளின்படி, தஞ்சை மாநகரில் சதா-சிவராயர் என்பவருடைய தோட்டத்தில் நிட்டை சாதித்து அடியார்-கட்கும் திருவருள் புரிந்துகொண்டிருந்த போது கலி நாலாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று (4983) ஆங்கிலம் 1881-க்குச் சரியான தமிழ் விஷு ஆண்டு மார்கழித் திங்கள் பதினொன்றாம் நாளில் பூர்வ பட்ச சதுர்த்தசி திதியில் திருவோண நட்சத்திரத்தில் பகல் பதினோரு நாழிகையில் சச்சிதானந்த சொரூப பரப்பிரம்மத்தில் இரண்டறக் கலந்தருளினார்.

முதல் மாணவர் :

வல்லுண்டான்பட்டியிலிருந்த கோவிந்த வல்லுண்டார் என்பவர் சுவாமிகளின் பெருமையைக் கண்டு உணர்ந்திருந்தபடியால் சுவாமிகளையே தம்முடைய குருவாகக் கொண்டு பணிபுரியத் தொடங்கினார். இல் வாழ்க்கையை வெறுந்து ஒதுக்கி விட்டுச் சுவாமிகளோடு கூடவே திரிந்து ஆக வேண்டியவைகளைச் செய்து சுவாமிகளுடைய திருவருளுக்கு உரியவராக விளங்கியிருந்தார்.

இறுதியுரை.

சுவாமிகளுடைய உடல் சமாதி வைக்கப் பெற்று நாள் வழிபாடும், சிறப்பு வழிபாடாகிய குருபூஜையும் நன்கு நடைபெற்று வரு-கின்றன. இஞ்ஞான்றும் அனபர்கள் பலர் சுவாமிகளின் வடிவாகிய சிவலிங்கத்தை வழிபட்டுத் தாம் எண்ணிய எண்ணமெல்லாம் இனிது நிறைவேறப்பெறுகின்றனர்.

ஸ்ரீ பால் சுவாமிகள் மடம் :

1981-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 24-ஆம் நாள் ஸ்ரீ பால் சுவாமிகள் சமாதியடைந்த போது ஸ்ரீ கோவிந்தசாமி சுவாமி என்பவர் சுவாமிகளின் சீடராயிருந்து சுவாமிகட்கு ஆகவேண்டிய பணிகளைச் செய்து கொண்டிருந்தார். அவர் ஸ்ரீ பால் சுவாமிகளைச் சமாதி வைத்துச் சமாதிக் கோயில் கட்டினார். சாதுக்கள் தங்கியிருக்கும் மடம் அமைத்தார். தாம் பெரும் முயற்சி செய்து நிலபுலன்கள் வாங்கி பூஜை முதலியன சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்தார். 1902-ஆம் ஆண்டு வரை எல்லாவற்றையும் சிறப்பாக நடத்தி விதேக முக்தி-யடைந்தார்.

மடாதிபதிகள் பெயர் வரிசை :	சமாதி இருக்குமிடம்
தவத்திரு பாலைய ஞானதேசிக சுவாமிகள்	கரந்தை தஞ்சை வடக்கு வாசல்
,, பாலைய கோவிந்த சுவாமிகள்	- விருத்தாசலம் ஆற்றங்கரை
,, பிரம்மானந்த சுவாமிகள்	- குப்புசாமி ராஜ், சிக்கந்தம்பூர், திருச்சி, துறையூர்.
,, செல்லப்ப சுவாமிகள்	- காளையார் கோவில்
,, வீரசேகரகிருஷ்ண சுவாமிகள்	- தஞ்சாவூர் பால்சாமி-மடத்தின் தோட்டம்
,, மகா வாசுதேவ சுவாமிகள்	- தஞ்சை பால்சாமிமடம் தோட்டம்
,, மகா கோவிந்த சுவாமிகள்	- திருச்சி கொப்பமபுரி
,, மு. கோ. கிருஷ்ண சுவாமி	- தஞ்சை பால்சாமி மடம் தோட்டம்
,, சுவாமி அகிலானந்த	- தற்சமய மடாதிபதி

ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் வரலாறு

தோற்றம் :

சோழவள நாட்டிலே தஞ்சை மாநகரில் பிரம்மானந்த என்று பிற்காலத்தில் பெயர் சிறந்து விளங்கிய வெ. குப்புசாமி ராசு அவர்கள் கலி 4968க்குச் சரியான அட்சய ஆண்டு பங்குனித் திங்கள் 2-ஆம் நாள் ஆங்கில வருஷம் 1867- மார்ச்சு மாதம் வியாழக் கிழமை வெங்கிடசாமி ராசு பாப்பம்மாள் என்போருக்கு புதல்வராகப் பிறநதார்.

கல்வி :

ஐந்தாம் அகவை நிரம்புவதற்கு முன்பே தந்தையாரே இவருக்கு கல்வி கற்பித்ததோடு தகுந்த ஆசிரியரைக் கொண்டும் கற்பிக்கச் செய்தார். இவர் தமிழ், தெலுங்கு, வடமொழி, மராட்டி, கன்னடம் முதலிய பலமொழிகளைக் கற்றுத் தேர்ந்தார். மேலும் ஆங்கிலம் இந்தி, மலையாளம் சிங்களம், வங்காளி முதலிய மொழிகளைக் கற்றுணர்ந்தார்.

இளமையில் தவநிலை :

இவரது மனம் இளமையிலேயே பரம்பொருளை நாடியது. மறை முடிவு (வேதாந்த) நூல்களை நன்கு கற்றார். சிறுவராக இருக்கும் போது வீட்டிலுள்ளவர்களோடு படுத்து உறங்கிக் கொண்டிருந்தார். நள்ளிரவில் அவரது தாயார் விழித்த போது இவர் நிட்டை செய்து கொண்டிருந்ததைக் கண்டார். காரணம் வினவிய போது, ''சும்மா உட்கார்ந்து கொண்டிருப்பதாக'' கூறி படுத்து விட்டார். அடிக்கடி இவர் நிட்டை செய்வது வழக்கமாகி விட்டது.

திருமணம் :

இவரது போக்கைக்கண்ட உறவினர் இவருக்கு திருமணம் செய்து வைக்க எண்ணி பதினெட்டு வயது முடிந்ததும் கிருட்டிணம்மாள் என்னும் பெண்ணைத் திருமணம் செய்து வைத்தனர். ஐந்தாறு ஆண்டுகள வீட்டிலிருந்த இவர் யாருக்கும் தெரியாமல் திருவிடைமருதூர், திருவையாறு முதலிய இடங்களில் மறைவாகத் தங்கி இறை வழிபாடு நிட்டை முதலியன செய்து கொண்டிருந்தார்.

உ

சிவமயம்



ஸ்ரீ வி. பிரஹ்மானந்த சுவாமிகள்

மாணவர் :

நிட்டையில் இருந்து மறைபொருளை நாடியிருந்த காலத்தில் திருநெல்வேலியில் சைவ வேளாளர் மரபில் தோன்றிய கல்வி கேள்வி-களில் சிறந்த நற்குணம் பொருந்திய ஆறுமுகம் பிள்ளை என்பவர் இவருடன் உறைந்து பணிவிடைகள் செய்து வந்தார்.

கடவுள் உணவளித்தல் :

திருவிடைமருதூருக்கு அண்மையில் உள்ள மூங்கில் காட்டில் யாருமறியாத இடத்தில் இவர் நிட்டை செய்துகொண்டிருந்தார். அவரை எவரும் கண்டு உணவளிக்கவில்லை இரண்டு மூன்று நாட்கள் கழித்து பசிநோயினால் வருந்தி கண் விழித்தபோது திருவிடை-மருதூரில் எழுந்தருளியுள்ள மருதவாணப் பெருமாள் அந்தணர் வடிவத்தில் வந்து இவருக்கு உண்வளித்து மறைந் தார்.

குரு கீதை :

தஞ்சை அரண்மனை சரஸ்வதி மகால் நூலகத்தில் ஒருமுறை இவர் நூல்களைப் புரட்டிக்கொண்டிருந்த போது குருகீதை என்னும் அரிய நூல் கிடைத்தது அது முதல் தக்க குருவைத் தேடி அலைந்த இவர் விட்டுனுபாவா என்னும் பெரியாரைப்பற்றிஒருநாள உணர்ந்தார் அவர் வேதாந்த நூல்களையெல்லாம் கற்பித்தார்.

நூல்கள் இயற்றுதல் :

குப்புசாமி ராசுவின் மனப்பக்குவத்தையுப் இலக்கண இலக்-கியப் பயிற்சியையும் விட்டுனுபாபா நண்குணர்ந்ததால் நூல்கள் பல இயற்றும்படி கட்டளையிட்டார். அவருடைய கட்டளையை ஏற்று வேதாந்த நூல்கள் பலவற்றை தமிழில் மொழிபெயர்த்து தமிழ்த் தொண்டு புரிந்தார்.

வடநாடு செல்லுதல் :

சுவாமியின் மனைவியும், குழந்தைகள், தாயார் ஆகியோர் பரகதியடைந்தனர் சுவாமி காசி செல்ல எண்ணி தமது தந்தையாருக்கு தெரிவித்தார். தந்தையார் தமது காலத்திற்குப்பின் செல்லலாம்என்று தடுத்தார். சென்று உரிய காலத்தில் திரும்பி விடுவதாகக் கூறி வட-நாடு சென்றார். துவாரகை. மதிரா, பிருந்தாமனம். ஹரித்துவார் ஆகிய இடங்களைப் பார்த்து தமிழ் நாடு திரும்பினார்.

பல அன்பர்கள் :

சுவாமிகளுக்குப் பலர் மாணவர்களாகி வேதாந்த நூல்களைக் கற்றுத் தெளிந்தனர். அவர்களுள் இராமசாமி ஐயா என்பவர் குறிப்பிடத் தக்கவர். இவர் கீதாசாரத் தாலாட்டு முதலிய நூல்களை இயற்றினார்.

பொதிமலைக்குப் போதல் :

இவர் தம் மாணவர்களுடன் தென்னாட்டிலுள்ள சிவப்பதிகட்கு வழிப்பயணம் சென்றார். திருக்குற்றாலம் அடைந்தார் ஒரு நாள் விடியற்சாம நேரத்திற்கு காலைக் கடன் முடிக்கச் சென்றார். மாணவர் ஒருவர் கைவிளக்கை எடுத்துக்கொண்டு சென்றார். சிறிது தூரத்தில் புலி ஒன்று இவர்களை முறைத்துப் பார்த்தபடி நின்றது அஞ்சிய மாணவர் அவரிடம் அதைக் கூற. குரு மாணவரைப் பாாத்து ''அப்பா! அஞ்சாதே. நாம் இவ்வுலகில் எதையும் பார்த்து அஞ்சுதல் கூடாது. அவைகளும் நம்மைக் கண்டு அஞ்ச வேண்டியதில்லை. எங்கும் பரவியுள்ள பிரமந்தான் புலிக்குள்ளும் பரவியுள்ளது. நாம் வேறு புலி வேறு அல்ல புலியே நாம்; நாமே புலி, அப் புலியின் பொருட்டு நாம் அஞ்சவேண்டியதில்லை, இவ்வுடல் அழிய வேண்டிய காலம் நெருங்கியிருப்பின் அழியட்டும்' என்று கூறினார். புலி சிறிது நேரம் உற்று பார்த்து விட்டு தன் வழியே சென்று விட்டது.

நூல்கள் வெளியிடுதல்.

பின் இவர் தஞ்சையை அடைந்து 'சங்கர விலாச சாரதா மந்திரம்' என்னும் பெரோடு நூல் வெளியீட்டகம் ஒன்று தொடங்கித் தாம் எழுதிய நூல்களையெல்லாம் பதிப்பித்துவெளியிட்டார். மீண்டும் வடநாடு சென்றார்.

இறுதி.

1921-ஆம் ஆண்டு புரட்டாசித் திங்கள் முதல் நாள் வெள்ளிக்கிழமை திருச்சி மாவட்டத்திலுள்ள இரட்டியார் துறையூருக்கடுத்த சிக்கத்தம்பூர் என்னும் ஊரில் வீடுபேறு அடைந்தார். அவர் யாக்கையை அவ்விடமே சமாதி வைத்து கோயில் கட்டி வழிபாடு செய்து வருகின்றனர்.

ஸ்ரீ பிரஹ்மானந்த சுவாமிகள் சுமார் 40-க்கு மேற்பட்ட நூல்கள் இயற்றியுள்ளார் அவற்றுள் சில வருமாறு

இவர் இயற்றிய நூல்கள் :

- பஞ்சதசப்பிரகரணம்
- சீவன் முத்தி விவேகம்
- பாலபோதம்
- விருத்திரத் திநாவலி
- நாநாசீவ வாதக்கட்டளை குறிப்புரை
- ,, செய்யுள்
- விவேகசிந்தாமணி
- சங்கர நீலகண்டாசார்ய சம்வாதம்
- ஹடயோகப் பிரதீபிகை
- சிவயோகப் பிரதீபிகை
- அட்டாங்க யோகசூத்திரம்
- யோக தாராவலி
- நாரத பத்தி சூத்திரம்
- பாணினி வியாகரணம் தமிழ்விளக்கவுரையுடன்
- அபரோட்சா நுபூதி
- ஆத்மபோதமும் தத்துவபோதமும்
- பஞ்சீகரணம் முதலியன
- குருபுசங்க தோத்திரம்
- பிரச்நோத்தா ரத்தினமாலை
- சதாசாரம்
- ஆத்மநாத்ம விவேகம்
- சிவஞானபோத உரைநடை
- ஞானவாசிட்ட உரைநடை
- கைவல்லியோ’பநிடதம் (செய்யுள்)
- அமிர்தபிந்துபநிடதம் ,,
- சுகரகசியோபநிடதம் ,,

வாசுதேவ சுவாமிகள் வரலாறு

***

காமராஜ் மாவட்டம் இராஜபாளையம் வட்டம் இராஜபாளையம் மாநகரிலுள்ள பழையபாளையம் என்னும் பகுதியில் வைணவர்களாயும் சைவ வைணவ சமரசக்கருத்தினராயும தெய்வபக்தியில் சிறந்தவராயும் ஆந்திரமொழியினராயும் அற வள்ளல்களாயும் உள்ள சூரியவம்ச சத்-திரியகுலத்து அரசர்களாகிய இராஜபரம்பரையில் வேங்கேசனம் அழக-ராஜா என்பவரும் அவரது மனைவி மஞ்சம்மாள் அம்மையாரும் இல்ல-றத்தை நல்லறமாக நடத்தி வந்தனர் மிகுந்த தெய்வபக்தி உடையவர் களாக நாள் தோறும் ஆலய வழிபாடுகளும், யோகஞான சாஸ்திரங்-களைப்பயின்று தியானாதிகளும் செய்து வந்தனர்.

அவர்கட்கு பகவானது திருவருளினால் ஐந்து மகன்களும் ஒரேயொரு பெண் மகளும் பிறந்து சிறப்புடன் வளர்ந்து வந்தனர். மேற் படி ஆறுபேரில் நான்காவதாக ஆங்கிலம் 1903-ம் வருஷம் ஜெனித்த வருக்கு முத்துசாமி ராஜா என்னும் பெயர் அமைத்துச் சிறப்புற வளர்த்து வந்தனர். ஆங்கிலம் 1934-ல் ஆன்மீக பக்தியால் வீட்டை விட்டு, இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடிக்குச் சமீபத்திலுள்ள ஸ்ரீ ஜகத்-குரு சங்கரபகவத் பாதாச்சாரிய சுவாமிகளின் அத்வைத ஞானகுரு பரம்பரையைச் சார்ந்த கோவிலூர் மடாலயத்தை அடைந்து, அங்கு குருமூர்த்தியாக இருந்த ஸ்ரீலஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளைக் குருவாகக் கொண்டு, அவர்களிடம் காஷாய சந்நியாசத்தைப்பெற்று, ''வாசுதேவ சுவாமி'' என்னும் தீக்ஷா நாமத்தையடைந்து, அங்கு வேதாந்த ஞானசாத்திரங்களையும் இதர இலக்ஷண சாஸ்திரங்களையும் பயின்று வந்தார்.

ஆங்கிலம் 1948-ம் வருஷம் செப்டம்பர் மாதம் தஞ்சாவூர் ஸ்ரீ பாலைய ஞானதேசிக சுவாமிகளின் மடாலயத்திற்குத் தலைவராக வாசுதேவ சுவாமிகளை, குருமூர்த்தியாகிய ஸ்ரீ மகாதேவஞானதேசிகர் கட்டளையிட்டு அனுப்பி வைத்தார். அம்மடாலயத் தலைவர் பொறுப்-பேற்று மடாலயத்தின் பூசனையாதிகளையும், வேதாந்தஞானசாஸ்திர போதனைகளையும், ஆத்மத் தியானாதிகளையும், சிறப்புற புரிந்து அம் மடாலயத் திருப்பணிகளையும் சிறப்புடன் நடத்தி வந்தார். இவ்-வாறு இருந்து வரும் நேரத்தில் மன்மத வருஷம் மார்கழி மாதம் (31—12—1956)-ல் விதேக முக்தியடைந்தார்.

உ

சிவமயம்



ஸ்ரீ மகா வாசுதேவ சுவாமிகள்

ஸ்ரீ மகாவாசுதேவ சுவாமிகளின் தம்பி சோலைமலை ராஜா என்பவரும் இவருக்கு முன்பே ஆங்கிலம் 1933-ல் வீட்டை விட்டுத் துறந்து ரிசிகேஷம் ஸ்ரீலஸ்ரீ சுவாமி சிவானந்தா அவர்களைக் குருவாகக் கொண்டு, அவரிடம் காஷாய சந்நியாசம் பெற்று சுவாமி அபேதா-னந்த சரஸ்வதி என்னும் தீஷாநாமத்தையடைந்து பலவருடங்கள் குரு-விற்கு உறுதுணையாக இருந்து வந்தனர்.

தற்சமயம் கடந்த 13 ஆண்டுகளாக வடஆற்காடு மாவட்டம் வந்தவாசி தாலுகா தெள்ளாறு என்னும் ஊரில் ஸ்ரீ திருஞான சம்பந்த சுவாமிகளின் மடாலயத் தலைவராக இருந்து வருகிறார். இன்னும் அவ்வூர் மக்களுக்கு நல்லாசிகள் வழங்கி வருகிறார். அவ்வூரிலுள்ள சிலர் அவர்பால் பிரியம் கொண்டு அவரது பெயரில் 'சுவாமி அபே-தானந்த பாலிடெக்னிக் கல்லூரி'' ஒன்று அமைத்துள்ளனர். ஐந்து வருடங்களாக அது சிறப்புடன் நடைபெற்று வருகின்றது.

இவருக்கு அடுத்து பிறந்த (அதாவது கடைசி தம்பி) ராமசாமி ராஜா என்பவர் இளம் வயதிலேயே நம் இந்திய நாட்டுக்காக சுதந்திர போராட்டக் காலங்களில் மகாத்மா, நேரு, ராஜாஜி, குமாரசாமி ராஜா ஆகியோருடன் சேர்ந்து சிறை சென்றார். நாட்டுப்பற்று மிகுந்தவ-ராயும், சுதந்திர தியாகிகளில் ஒருவராகவும் திகழ்ந்து 'ஜெய்ஹிந்த்'' ராஜா என்னும் நாமத்தையும் அடைந்து தற்சமயம் மதுரை மாவட்டம் தேனி மாநகரில் இன்றும் சுதந்தர தியாகச் செம்மலாக இருந்து வருகிறார்.

சுவாமிகளின் சீடர்போல் இருந்த இராஜபாளையம் பளையபாளையத்தை சேர்ந்த KT திருப்பதி ராஜா அவர்கள் வருடந் தோறும் அவர்களின் சமாதிக்கு பூஜை செலவுகளை ஏற்று நடத்தி வருகிறுர்கள்.

ஸ்ரீ - மகா - கோவிந்த சுவாமிகள் வரலாறு (சுருக்கம்)

***

பிறப்பு :

தெய்வ பக்தியிற் சிறந்த இந்திய நாட்டின் தென்பகுதியில் இராமநாதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டத்தில் இராஜ-பாளையம் என்னும் ஊரிலுள்ள சக்கராஜாக்கோட்டை என்னும் பகுதியில் இராஜ பரம்பரையில் குமாரராஜா என்பவருக்கும், இராஜம்-மாள் அம்மையார் என்பவருக்கும் பகவான் திருவருளால் கலியுகாதி வருஷம் 5010-க்குச் சரியான சாலிவாகன வருஷம் 1831 ஆங்கிலம் 1908-ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம் 13ம்தேதி. தமிழ் கீலக வருஷம் ஆடிமாதம் 29ந் தேதி குருவாரம் உதயாதிநாழிகை 31-விநாடி 47-க்கு சரியான மாலை மணி 6, நிமிஷம் 42, அமரபக்ஷம், துவிதியைதிதி, சதய நட்சத்திரம் கும்பலக்கினம் கூடிய சுபவேளையில் தவப்புதல்வர் ஜனனமாயினார்.

வளர்ப்பு :

பெற்றோர் புத்திரருக்கு 'கோவிந்த ராஜா' என்னும் பெயர் அமைத்து சிறப்புற வளர்த்தனர். ஐந்தாம் வயது நிகழுங் காலத்தில் பள்ளிக்கூடம் அனுப்பி ஆந்திரம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி-களைக் கற்று வரும்படி செய்தனர். 17 வயது வரை இவ்வாறு கற்றார். கற்று வந்த காலமுதலாக தமது குலதெய்வமாகிய ஸ்ரீ ராமச்சந்திர பகவானை பூஜித்து வந்தார். வேதாந்த பக்திஞான சாத்திரங்களைப் பயின்று கொண்டார். அவரது 19-ஆம் வயது பிரபவ வருஷம் (ஆங்கிலம் 1927) வந்தது. பெற்றோர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று கோவிந்தராஜரிடம் கூறினர். அவர் அதற்கு உடன் படவில்லை.

துறவறம் :

வீட்டிலிருந்து புறப்பட்டு காரைக்குடிக்குச் சமீபத்தில் உள்ள-தும், ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத் பாதாச்சாரிய சுவாமிகளின் அத்வைத ஞானகுரு பரம்பரையைச் சேர்ந்ததும் ஆன கோயிலூர் மடாலயத்தை அடைந்து, அங்கு குருமூர்த்தியாக இருந்த ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக

உ

சிவமயம்



ஸ்ரீ - மகா - கோவிந்த சுவாமிகள்

சுவாமிகளைக் குருவாகக் கொண்டு அவர்களிடம் காஷாய சந்நியாசத்தைப் பற்று, ''கோவிந்தசுவாமி'' என்னும் தீக்ஷா நாமத்தையடைந்து அங்கு உபதேச பாடமாக நடத்தப் பெறுகின்ற நாநா ''ஜீவவாதக்கட்டளை'' முதல் 'ஞானவாசிட்டம்' வரையுள்ள வேதாந்த ஞானசாத்திரங்களையும் உபதேசப் பாடமாகக் கேட்டதுடன். ஸ்ரீ வீரநாராயண ஞானதேசிக சுவாமிகளிடம் கேட்டுத் தெளிந்தனர்.

புனித யாத்திரை :

கோவிந்த சுவாமிகளுக்கு வடநாட்டிலுள்ள ஸ்ரீ காசி சேத்திரம் முதலிய புண்ணிய சேத்திரங்களைத் தரிசனம் செய்ய வேண்டும் என்றும், அங்கு சமஸ்கிருதம் கற்க வேண்டும் என்றும் விருப்பம் ஏற்பட்டது. தமது குரு ஸ்ரீ மகாதேவ ஞானதேசிக சுவாமிகளிடம் தமது கருத்தைத் தெரிவித்து அனுமதி பெற்றுக்கொண்டு கங்கை சென்று, கங்கையில் நீராடி, ஹரித்துவாரம் சென்று அங்கு ஸ்ரீசூரத்கிரி மண்டலேசுவர சுவாமிகளின் ஆசிரமத்தில் தங்கி சமஸ்கிருத மொழி பயின்று பகவத்கீதை முதலியவற்றைப் பயின்று, ஸ்ரீ மண்டலேசுவரர் அவர்களால் ''கோவிந்தானந்தகிரி சுவாமி'' என்னும் நாமம் சூட்டப்பெற்று ஓர் ஆண்டுக்காலம் தங்கியிருந்தனர். பின்பு அவரிடம் விடைபெற்று கோவிலூர் மடாலயம் வந்து அங்கேயே தங்சியிருந்தனர்.

தஞ்சை ஸ்ரீ பால்சாமி மடத்தின் தலைவராதல் :

இவ்வாறு இருந்து வரும் காலத்தில் தஞ்சாவூர் ஸ்ரீ பாலையஞானதேசிக சுவாமிகள் மடாலயத்தின் தலைவராக இருந்த ஸ்ரீ வீரகிருஷ்ணசுவாமி தமது சரீரத்தின் அந்தியகாலம் சம்பித்ததை அறிந்து தமக்கு அடுத்தபடியாக அந்த மடாலயத்தின் தலைமை வகிக்க ஒரு சாதுவை நியமிக்க எண்ணி தமது கருத்தை அவ்விடம் வந்திருந்த அருணாசலசுவாமிகள் மூலம் கோவிலூர் மடாலய குருமூர்த்தி ஸ்ரீ மகாதேவஞான தேசிசளிடம் தெரிவித்தனர். அவரது கட்டளைக்கிணங்க கோவிநத சுவாமிகள் ஸ்ரீ பாலைய ஞானதேசிக சுவாமிகளின் மடாலயத் தலைவரானார்.

ஏகாம்பரக் குப்பம்பேட்டை ஸ்ரீ சிவசுப்பிரமணிய சிவானந்தயதிந்திர சுவாமிகளின் மடாலயத் தலைவராதல் :

இவ்வாறு தஞ்சாவூர் மடாலயத்தில் இருந்து வரும் காலத்தில் ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளிடம் ஞானாபதேசம் பெற்ற

காசிவாசி ஸ்ரீ சிவானந்தயதீந்திர சுவாமிகள் ஏகம்பரக் குப்பம் குமார வெங்கிடபெருமாள் ராஜாப்பேட்டை என்னும் ஊரில் ஒர் சிறந்த மடாலயம் அமைத்து அதற்கு ஸ்ரீ சிவசுப்பிரமணிய மடம் என்று பெயரிட்டு ஞானோபதேசம் புரிந்துகொண்டிருந்து பின்பு சமாதியடைந்து சமாதியாலயம் கொண்டிருந்தனர். அம் மடால்யத்திற்கு தலைமையேற்க வேண்டி இருந்ததால் தஞ்சை மடாலயத்திற்கு ஸ்ரீ வாசுதேவசுவாமிகளை நியமனம் செய்து விட்டு கோவிந்த சுவாமிகள் ஏகாம்பரக்குப்பம் மடாலயப் பொறுப்பேற்றார். அவ்வமயம் தஞ்சை மடாலயத்தில் ஸ்ரீ வாசுதேவ சுவாமிகள் விதேக முக்தியடைந்தார். (மன்மத வருஷம் மார்கழி மாதம் 1956 ஆம் வருஷம் டிசம்பர் மாதம்) அதனால் கோவிந்த சுவாமிகள் தஞ்சாவூர் வந்து மடாலயப் பொறுப்பேற்றார். இச் சமயத்தில் சிருங்கேரி ஸ்ரீ சாரதா பீடம் ஜகத்குருவின் ஆசியைப் பெற்றார்.

நன்னிலம் ஸ்ரீ நாராயண தாண்டவேசுவர சுவாமிகளின்
சமாதியாலய சீரமைப்புத் திருப்பணி :

இவ்வாறு இருந்து வரும் காலத்தில் நன்னிலம் ஸ்ரீ நாராயண தாண்டவேசுவர சுவாமிகளின் சமாதியாலயம் சீர்குலைந்து இருந்ததையறிந்து அதைச் சீரமைப்புத் திருப்பணி செய்ய வேணடுமென்று கருதி தஞ்சை மடத்திற்கு ஸ்ரீ மு. கோ. கிருஷ்ணசுவாமிகளை மடாலயத் தலைவராக நியமித்து நன்னிலம் சென்றார்.

சான்றோர்களால் ''சிறந்த ஞான நூல்'' என்று புகழப்பட்டதும், சிறந்த தமிழ்க் கவிகளால் அமையப்பெற்றதுமான **''கைவல்லிய நவநீதம்''** என்னும் வேதாந்தஞான நூலை இயற்றியவரும் ஸ்ரீ தாண்டவேசுவர சுவாமிகளே. அவரது சமாதியாலயத்தை சீரமைப்புத் திருப்பணி செய்துவிக்க எண்ணி காஞ்சி காமகோடிபீடம் ஸ்ரீ ஜகத்குரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராசாரிய சுவாமிகள் அவர்களிடம் நற்சான்றுப் பத்திரம் பெற விரும்பி அங்கு சென்று விவரம் கூறி, நற்சான்றும் பத்திரமும், ரூ. 500/- பெற்றார். நற்சான்றுப் பத்திரத்தை அச்சிட்டு வெயீடு செய்து நிதியுதலி பெற்று வந்தார். திருச்சி, கொப்பமாபுரி வந்து ஸ்ரீ நடராஜ ரெட்டியார் ருக்மணியம்மையார் அவர்களின் மனைக்கு வந்து அவர்களிடம் பொருளுதவி பெற்றார் அவ்வமயம் அவர்கள் கோவிந்தசுவாமிகளிடம் ''தாங்கள் இங்கு வந்திருந்து எங்கட்கு வேதாந்த பக்திஞான சாஸ்திர உபதேசங்களைப் போதனை செய்யவேண்டும்'' என்று

கேட்டுக்கொண்டனர். சுவாமிகள் இடையிடையே வந்து போதனை புரிவதாகக் கூறி, நன்னிலம் சென்று நன்னிலம் ஆலயத்தின் திருப்பணியை முடித்து கலக வருஷம் ஆவணி மாதம் 20-ந் தேதி (ஆங் 1968 செப். 4-ம் தேதி) புதன் கிழமை பூர்வபட்ஷம் திரயோதசி திதி, திருவோண நக்ஷத்திரம். சித்தயோகம், விருச்சிக லக்கினம் கூடிய சுபதினத்தில் உதயாதி நாழிகை 12க்கு மேல் 15க்குள் (10-45-12க்கு) மகாகும்பாபிஷேகம் செய்வித்தார். பின்னர் அம் மடத்திற்கு ஸ்ரீக. பத்மநாப முதலியாரைத் தர்மகர்த்தாவாக நியமனம் செய்து கொப்பமாபுரி வந்து தங்கி ஞான சாஸ்திர உபதேசம் செய்து வந்தார்.

மகா கோவிந்த சுவாமிகளின் இறுதிக்காலத்தில் கொப்பமாபுரி நடராஜ ரெட்டியாா " ருக்மணி குடும்பத்தினர் தம் பங்களாவில் வைத்து பராமரித்து வந்தனர்.

சமாதியடைதல் :

ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகள் பிரஜோற்பத்தி வருஷம் ஆடி மாதம் 14ந் தேதி (30-07-91) கிருஷ்ணபக்ஷம் சதுர்த்தி திதி புரட்டாசி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் இரவு 1-00 மணி அளவில் விதேக கைவல்யம் அடைந்தார். அவரது திருமேனியை கொப்பமாபுரியில் சமாதி வைத்து சிறப்பு செய்து மேற்படி ஆலயத்தை தொடர்ந்து பரிபாலித்து நிர்வகித்து வருகிறார்கள். தற்போது ஸ்ரீரங்கம் வேணுகோபால் மகள் யசோதை அம்மாள் சமாதியை நிர்வகித்து பரிபாலனம் செய்து வருகிறார்கள். அவர்களுக்கு உறுதுணையாக இருந்து தொண்டு செய்து வருபவர் வைரிசெட்டிப்பாளையம் முத்தமிழ்ப்பண்ணை அரங்கராசன் ஆவார்.

ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகள் இயற்றிய நூல்கள்:

ஸ்ரீ வீரசேகர ஞானதேசிக சுவாமிகளின் திருவெம்பாவை, திருப்பள்ளி எழுச்சி.

ஸ்ரீ வீரசேகரஞானதேசிக சுவாமிகளின் அறுபதாம் ஆண்டு குருபூஜை, விழாவை முன்னிட்டு இயற்றிய சரிதம்,
அந்தாதிக் கவி அறுபது.

மகாவாக்கிய விசாரம்

மகாவாக்கிய விசார சங்கிரகம்

காரண அகங்காரக் கிரந்தி நீக்கத்தால் காரிய காம மரண நீக்கம்

மனிதன் எக்காரணத்தால் உயர்ந்தவன்

சிந்முத்திரார்த்தம்.

திருச்சி மாவட்டம் துறையூர் தாலுகா வைரிசெட்டி பாளையத்லதச சேர்ந்த திரு பா. அரங்கராஜன் அவர்கள் ஸ்ரீ சுவாமி மகா கோவிந்த சுவாமிகளுடன் பல ஆண்டுகள் பழகி வேதாந்த பாடங்கள் கற்றவர். ஸ்ரீ சுவாமிகளைப்பற்றி தன் அனுபவங்களை சுருக்கமாக பின் வருமாறு கூறி உள்ளார்.

வெரிசெட்டிபாளையத்திலிருக்கும் நான் கொப்பம்பட்டிசென்று ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகளை முதன் முதலாக 24—3—74-ல் சந்தித்தேன்.

கைவல்ய நவநீதம் என்னும் நூலை இயற்றிய சுவாமி ஸ்ரீ தாண்டவராய சுவாமிகளுக்கு நன்னிலம் எனும் ஊரில் திருக்கோயில் எழுப்பிச் சிறப்பித்துள்ளார்கள் சுவாமிகள். சுவாமிகளிடம் கைவல்ய-நவநீதம் பாடம் சொல்லித் தரும்படி கேட்டேன். அதற்கு சுவாமிகள் எங்களிடம் அன்பு காட்டி எங்களுக்கு வேதாந்த பாடம் முறையாக கா நா ஜீவாதக்கட்டளை முதல் பகவத்கீதை முடிய நடத்தினார்கள்.

சுவாமிகள் தஞ்சை ஸ்ரீ பால் சுவாமிகள் மடத்திலும் ஆந்திர மாநிலம் சித்தூர் மாவட்டம் ஏகாம்பரகுப்பம் பேட்டை ஸ்ரீ சிவானந்த-யதீந்திர சுவாமிகள் மடத்திலும் பல ஆண்டுகள் மடாதிபதியாக இருந்து வந்துள்ளார்கள்.

சுவாமிகள் வெளி மடங்களுக்குச் செல்கின்ற சமயங்களில் என்னையும் உடன் அழைத்துப் போவார்கள். அங்குள்ள மற்ற சாதுக்-களிடம் என்னை அறிமுகம் செய்து வைப்பார்கள்.

சுவாமிகளின் ஏற்பாட்டில் மடங்களில் நடக்கும் விழாக்களில் அடியேன் ஆன்மீக சொற்பொழிவு செய்வதுண்டு. அது சமயம் நான் கூறும் கருத்துக்களையும் சிறு கதைகளையும் கேட்டு சுவாமிகள் மகிழ்-வார்கள்.

சுவாமிகள் பேசும் போது வீண் வார்த்தைகளையோ வேண்-டாத கருத்துக்களையோ ஒரு போதும் பேசமாட்டார்கள். அத்வைத வேதாந்தத்துக்கு மறுப்பு எவர் பேசினாலும் தயங்காமல் உடனே கண்டித்துத் தக்க சான்றுகளுடன் மறுப்புரை தருவார்கள்.

உலகாயத விஷயங்களில் கவனம் செலுத்த மாட்டார்கள். எப்பொழுதும் பிரம்மநிஷ்டையிலும் ஆன்மீக விஷயங்களை பேசுவதிலுமே இருப்பார்கள். எந்தக் காரியமாயினும் அதனை உடனுக்குடன் தாமத-மின்றி செய்யவேண்டுமென விரும்புவார்கள்.

இறுதிக் காலத்தில் சுவாமிகள் தியானம் செய்வதிலும் வேதாந்த பாடம் நடத்துவதிலுமே அதிக நேரம் செலவிட்டார்கள். வெளியே செல்வதை மிகவும் குறைத்துக் கொண்டார்கள்.

பணத்திற்கு வாழ்க்கையில் சுவாமிகள் ஒருபோதும் முக்கியத்-துவம் தரவில்லை. எவரேனும் சுவாமிகளிடம் உதவிகோரி வருவார்க-ளானால் அதனை செய்துதருவார்கள். இவ்விதம் மற்றவர்களுக்கு பரோ-பகார செய்கின்ற சிறப்பும் காணப்பட்டது.

தான் சொல்லுகின்ற கருத்துக்களிலோ பேச்சிலோ தவறு காணப்பட்டால் அதனை எடுத்துக் கூறுவோமானால் அதனை ஏற்றுக் கொண்டு தமது தவற்றை திருத்திக்கொள்வார்கள்.

தன் வாழ்வில் சேகரித்த சிறந்த ஆன்மீக வேதாந்த நூல்-களை கடைசி வரையிலும் போற்றி பாதுகாத்து வந்தார்கள். மற்றவர்-களும் பயன்படுத்தும் படியும் செய்தார்கள். கடைசி வரையிலும் ஒரு சிறந்த துறவியாகவே வாழ்ந்து வந்தார்கள்.

சுவாமிகளோடு நெருங்கி பழகி வேதாந்த பாடம் கேட்ட இராஜபாளையம் பனையபாளையத்தைச சேர்ந்த A. S. வேலாயுத ராஜா அவர்கள் சுவாமிகளின் அந்திய காலம் வரை சேவை செய்துவந்தார்கள்

தற்சமயம் இராஜபாளையம் அருகில் மகா கோவிந்த சுவாமிகள் பெயரில் நினைவாலயம் கட்டும் முயற்சியில் உள்ளார்கள்.

ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகள்

★★★

தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்தில் எட்டாவது மடாதிபதியாக இருந்தார்கள். சுவாமிகள் காலத்தில் மடம் சீரும் சிறப்புமாக இருந்து பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்றுள்ளது. சுவாமிகளின் வரலாறு சுருக்கமாக வருமாறு.

பிறப்பு :

பாரத நாட்டின் திருவடியாக திகளும், பண்பாட்டுக்கு உறைவிடமாக உள்ளது தமிழகம். அதில் காமராஜர் மாவட்டம் உள்ளது. இராஜபாளையம் இம் மாவட்டத்திலுள்ள முக்கியநகரமாகும். தேசவிடுதலைப் போராட்டத்தில் முக்கிய பங்கினை வகித்து வந்தது. ஆன்மீக வளமும் செல்வ வளமும் உடைய நகரமாக திகழ்கிறது. இத்தகைய சிறப்புக்கள் அமைந்த இராஜபாளையத்தில் அமைந்துள்ள புதுப்பாளையம் எனும் ஊரில் திரு அழக ராஜா - குப்பம்மாள் தம்பதியருக்கு ஒன்பதாவது மகவாக சுவாமிகள் பிறந்தார்கள்.

சிறு வயதில் ஆன்மீக நாட்டமுடையவராக இருந்தார்கள். கொஞ்ச காலம் பெற்றோருடன் இருந்து வாழ்ந்து வந்தார்கள்.

துறவறம் :


பல ஆண்டுகள் கழித்து ஆன்மீக வாழ்வில் நாட்டமுடையவராய் விளங்கினார்கள். சென்னை வியாசர் பாடியில் உள்ள கரபாத்திர சுவாமிகள் மடாலயம் உள்ளது. அங்கு சென்று பல ஆண்டு வாழ்ந்தார்கள். அது சமயம் அம்மடத்தில் மடாதிபதியாக ஸ்ரீ சுவாமி முக்தாதானந்தா அவர்கள் இருந்தார்கள். கிருஷ்ண சுவாமி தன் துறவற வாழ்க்கைக்கு ஸ்ரீ முக்தானந்த சுவாமிகளையே ஞானகுருவாக ஏற்று பல வேதாந்தம் பழுதற கற்று தேர்ந்தார்கள். 1959-ஆம் ஆணடு ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகளிடம் சந்நியாச தீட்சை பெற்றார்கள். அது முதற்கொண்டு சுவாமிகள் "ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமி சுவாமிகள்" என்று அழைக்கப் பட்டார்.

மடாதிபதியாதல் :

தஞ்சாவூரில் ஸ்ரீ பாலைய ஞானதேசிக சுவாமிகள் மடம் உள்ளது இம் மடத்தில் ஸ்ரீ மகா கோவிந்த சுவாமி 7-வது மடாதிபதி-

உ

சிவமயம்



ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகள்

யாக இருந்து வந்தார்சள். தன் காலத்திற்குப் பிறகு மடாலயத்தினை சீரும் சிறப்புமாக நடத்தி வர தகுந்த துறவி ஒருவரை தேடினார்கள். சென்னை வியாசர்பாடி கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடத்தில் இருந்த வரும் ஸ்ரீ முக்தானந்த சுவாமிகளின் சீடருமான கிருஷ்ணசாமி சுவாமிகள் இதற்கு பொருத்தமானவர் எனக்கருதி அவருக்கு சந்நியாச தீட்சை தந்து தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு 8-வது மடாதிபதியாக நியமனம் செய்தார்கள.

ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகள் திருவுளப்பிரராயத்தின்வண்ணம் ஸ்ரீ பால் சுவாமி மடத்தை மிக நல்ல முறையில் நிர்வகித்து வந்தார்கள் இவர் மடத்தினைப் பொறுப்பேற்ற பொழுது பொருளாதர நிலையில் மடமானது பின் தங்கியிருந்தது.

ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு பல காலங்களில் பல அன்பர்கள் வெவவேறு இடங்களில் நிலங்களை தானமாக எழுதிவைத்திருந்தார்கள் அவைகளையெல்லாம் முறையாக இருக்கிறதா என்று கண்டறிந்து அவை பற்றிய விபரங்களை சேகரித்தார்கள் அந்த நிலங்களையெல்லாம் ஒரே இடத்தில் ஒரே ஊரில் சேர்ந்தார்போல் இருக்குமானால் விவசாயம் செய்வதற்கு வசதியாக இருக்கும் என்று எண்ணினார்கள். செலவினங்கள் வெகுவாக குறையும் என்று கருதினார்கள் நிலத்திலிருந்து அதிகமான வருவாயினையும் பெறலாம் என நினைத்தார்கள். பிறகு அதற்கு உண்டான முயற்சிகளில் இறங்கி நிலங்களையெல்லாம் ஒன்று சேர்த்து அன்னப்பன் பேட்டை கிராமத்திற்கு அருகாமையில் அமைந்திருக்கும் படி செய்தார்கள். மடத்திற்கு சொந்தமாக உள்ள நிலத்தில் தானே முன் நின்று நேரடி விவசாயம் செய்து வந்தார்கள். நில வருவாயினை அதிகம் பெறும்படி உழைத்தார்கள். அதன் மூலம் ஸ்ரீ பால் சுவாமி மடமானது ஓரளவு பொருளாதாரம் பெருகி மடத்தினை நிர்வகித்துவருவதற்கு போதிய வாருவாயை பெற்றார்கள்.

மடத்தில் முதன் முதலாக கட்டிய பழைய கட்டிடங்களேஉள்ளது. சமாதி கோயிலும் விரிவுபடுத்தி கட்ட எண்ணினார்கள். மடத்தின் கட்டிடத்தின் ஒரு பகுதியினை நீக்கி புதியதாக கட்டிடம் கட்டினார்கள். சமாதி கோயிலைச் சுற்றி சுற்று பிரகாரம் சுவர் எடுத்து மேல் தளம் போட்டுள்ளார்கள் துறவியர்கள் அன்பர்கள் தங்குவதற்கு பல வசதிகளை செய்துள்ளார்கள்.

இவ்வாறு மடத்தினை நிர்வகித்து வருங்காலத்தில் தஞ்சை மாவட்டம் மன்னார்குடி தாலுகா திருக்கனர் ஊரில் உள்ள கோ. ஆ. வீர. மடாலயத்தில் மடாதிபதியாக பொறுப்பேற்கும் நிலை ஏற்பட்டது.

அதனையும் ஏற்று திறம்பட பல ஆண்டுகள் நடத்தி வந்தார்கள்.

தஞ்சையில் கீழராஜ வீதியில் ஸ்ரீ சங்கரமடம் உள்ளது அந்த மடத்தை ஸ்ரீ பால் சுவாமி மடத்துடன் இணைத்து நிர்வகித்து வந்தார்கள். ஸ்ரீ சங்கர மடத்தில் உள்ள சமாதி கோவிலை விரிவாக கட்டி கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள்.

மகா சமாதி :

தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்தின் மடாதிபதியாக பல ஆண்டுகள் இருந்து தொண்டு செய்து வருங்காலத்தில் கடைசி இரண்டு ஆண்டு காலத்தில் உடல் நலம் குன்றியிருநதார்கள். எவ்வளவோ சிகிட்சை செய்தும் குணம் கிடைக்காமல் சுவாமிகள் 1989-ம்ஆண்டு நவம்பரில் 11-ம நாள் காலையில் சமாதியடைந்தார்கள் சுவாமிகளின் உடலை ஸ்ரீ பால் சுவாமி மடத்தில் சமாதிக் கோயிலுக்கு கிழக்கே மடத்து இடத்தில் சமாதி வைக்கப்பட்டுள்ளது

ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகளுடன் பல அன்பர்கள் துறவிகள் நீண்ட காலமாக பழகி வந்துளளார்சள். அவர்களில் சிலர் சுவாமிகளைப் பற்றி தங்கள் அனுபவங்களை கூறி உள்ளார்கள். அது பின்வருமாறு சுருக்கமாக கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ சுவாமி அகிலானந்த :

ஸ்ரீ சுவாமி விவேகானந்த குடீர், திருக்குற்றாலம்-627 802.
திருநெல்வேலி மாவட்டம்.

தஞ்சைக்கு முதன் முதலில் 1977-ம் ஆண்டு மத்தியில் வந்தேன். அது சமயம் ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கும் அழைத்து வரப்பட்டேன். அன்றைய தினம் தான் ஸ்ரீ சுவாமி மு கோ. கிருஷ்ணசுவாமி அவர்களை சந்தித்தேன். ஒரு சில மணி நேரம் தான் மடத்தில் இருந்தேன். பிறகு திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் சென்று துறவு வாழ்க்கையில் ஈடுபட்டேன். அதன் பிறகு சில மாதங்கள் கழித்து ஒரு சாதுவின் மூலம் மடல் எழுதி அனுப்பினார்கள். கடிதத்தில் "ஸ்ரீ பால்சுவாமி மடத்திற்கு வரும் படியும், மகா கோவிந்த சுவாமிகளிடம் வேதாந்த பாடம் கற்கவும் பிறகு ஸ்ரீ பால் சுவாமி மடத்தின் மடாதிபதியாக இருப்பதற்கு வாய்ப்பு" எனவும் எழுதியிருந்தார்கள். ஆனால் ஸ்ரீ சுவாமி சித்பாவனந்தரிடம் என்னை அர்ப்பனித்து ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கத்தில் இணைந்ததை தவிர்க்க விரும்ப வில்லை அதனால்

வர இயலாது என்று நான் கூறிவிட்டேன். ஆனால் தொடர்ந்து கடித தொடர்பு இருந்து வந்தது. ஆண்டில் சில தடவை தஞ்சை வந்து சுவாமிகளை கண்டு பேசியும் சென்று வந்தேன். நான் வடநாட்டு ஸ்தல யாத்திரை மேற்கொண்டு திரும்பும் போதெல்லாம் சுவாமிகளுக்கு பிரசாதம் கொண்டு வந்து கொடுத்துவிட்டு செல்வேன்.

ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகள் சொல்லி ஒரு முறை திருச்சி கொப்பம்பட்டியில் உள்ள ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகளை கண்டு வந்தேன். ஸ்ரீ பால்சுவாமி மடம், ஸ்ரீ சங்கரமடம் நிலங்களை விற்கும் போதெல்லாம் விற்க வேண்டாம் என்றும், பிற் காலத்தில் அது சமுதாயப் பணிக்குப் பயன் படும் என்றும் நேரிலும் கடித மூலமும் வாதாடுவேன். ஆனால் அக் கருத்தினை சுவாமிகள் ஏற்கமாட்டார்கள், ஆனாலும் சுவாமிகளுடன் உள்ள தொடர்பானது நெருக்கமாக இருந்தது. பல விஷயங்களைப் பற்றி பேசி கருத்துக்களை பரிமாறிக் கொள்வோம். அதோடு என்னை தனது மடாதிபதியாக பொறுப்பேற்க வேண்டும் என கூறுவதுண்டு. ஆனால் அது சாத்தியமில்லை என கூறிவிடுவேன். சொத்துக்கள் இருந்து என்ன பயன், நிம்மதி, மன அமைதி கிடைக்காதே என்று கூறி விட்டு சென்று விடுவேன்.

திருக்களர் மடத்தினைப் பொறுப்பேற்றதும் சுவாமிகளுக்கு வேலைப் பளுவும் கடமையும் அதிகரித்து விட்டது. நானும் பலமுறை திருக்களர் மடத்திற்கு சென்று வந்தேன். சுவாமிகளை காசிவரை யாத்திரை அழைத்து சென்றுவர எவ்வளவோ முயன்றும் அவர்களின் வேலையின் காரணமாக இயலவில்லை கூறி விட்டார்கள். சிறிது கோபப்படுபவர்.

சுவாமிகள் தனக்கு இறுதிக் காலம் நெருங்க சில அன்பர்கள் மூலம் மடாதிபதியாக வரவேண்டும் என செய்தி சொல்லி அனுப்பி என்னை அழைத்து வரும்படி கூறினார்கள். நான் அது சமயம் ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தினின்று விலகி தனியாக திருக்குற்றாலத்தில் ஆஸ்ரமம் அமைத்திருந்தேன். சுவாமிகளின் விருப்பத்தை ஏற்கும் வாய்ப்பில்லை. நேரில் ஒரு முறை சுவாமிகளை சந்திக்கும் போது பெரிதும் விரும்பி கூறினார்கள். அந்த ஒரு முறை தான் பார்ப்போம் என கூறினேன். அதன் பிறகு பல மாதம் கழித்து ஸ்ரீ மு கோ. கிருஷணசுவாமி சுவாமிகள் உடல் நோய்வாய்ப்பட்டு விட்டார்கள். சில மாதம் கழித்தே எனக்கு தெரிய வந்தது. செய்தி கிடைத்ததும் தஞ்சாவூர் வந்து சுவாமிகளை மருத்துவ மனையில் கண்டேன். ஓரளவு நடமாட்டம் பேச்சு இருந்தது. அது சமயம் அவர்களிடம் உயில் எழுதி வாங்கி விடாலாம் என்ற

யோசனை கூறப்பட்டது. அநத பேச்சுக்கே இடமில்லை. அதை ஏற்க விரும்ப வில்லை. இறைவன் திட்டப்படி நடக்கட்டும் என்று கூறிவிட்டு சென்றேன்.

பிறகு அடிக்கடி வந்து சுவாமிகளைப் பார்த்து சென்றேன். சுவாமிகளுக்கு நாளுக்கு நாள் உடல் நலம் குன்றி விட்டது. பிறகு தலையில் ஆபரேஷன் செய்யப்பட்டது. ஆனால் குணம் கிடைக்க வில்லை. நடமாட்டம், பேச்சும் நின்று விட்டது.

அதன் பிறகு வைத்தியம் செய்யும் பொருட்டு சுவாமிகளை பல ஊர்களில் ஆஸ்பத்திரிகளில் காண்பித்து சிகிட்சை தரப்பட்டது. பயன் தரவில்லை. அவர்களின் நலிவுற்ற உடலை ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கே கொண்டு வந்து விட்டார்கள். தொடர்ந்து வைத்தியம் செய்து வந்தார்கள். நான் இடையிடையே வந்து போய்கொண்டிருநதேன். சுவாமி மு. கோ. கிருஷ்ண சுவாமிகள் உடல்நலமின்றி மடத்தில் இருந்த போது ஸ்ரீ மகாகோவிந்த சுவாமிகள் பால்சுவாமி மடத்தில் இருந்து வந்தார்கள். அவரை மடத்தில் சந்தித்து பேசிவிட்டுசெல்வேன்.

ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகளை கடைசியாக 26-11-1989 தேதியில் பார்க்க வந்திருந்தேன். அன்று காலை சுவாமிகள் சமாதி ஆகி விட்டார்கள். நான் தங்கியிருந்து அங்கு நடந்த விசேஷ பூஜையில் கலந்து கொண்டேன். சுவாமிகளுக்குப் பதில் உயிலின்படி ஸ்ரீ மகா-கோவிந்த சுவாமிகள் மடாதிபதி ஆனார்கள். இரண்டே நாட்களில் என்னை மடாதிபதியாக நியமிக்க ஏற்பாடு செய்தார்கள். எவவளவோ நான் மறுத்துக் கூறியும் உயில் எழுதப்பட்டது. பொறுப்பேற்று மடத்-தின் பணிகளை செய்து வந்தேன். இடையில் என் காலத்திற்குப் பிறகு ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு எனது வாரிசு வர வாய்ப்பில்லாத கருத்து கூறப்பட்டது. சொன்ன அன்றைய தினமே பொறுப்பை வேண்டாம் எனக் கூறியும், நான் இதை முன்னரே விரும்ப வில்லையே நல்லதாயிற்று என்னை இறைவன் தப்பிக்க வைத்தான் என எண்ணி அன்றைய தினமே குற்ருலம் சென்று விட்டேன் அதன் பின் வேறு ஒரு சாதுவுக்கு உயில் எழுதி அவர்கள் ஒரு வருடம் மடத்தை நிர்வாகம் செய்து வந்தார்கள். அவரது நிர்வாகம் சரியில்லை என்று மறுபடியும் தற்செயலாக தஞ்சை வந்த என்னை ஸ்ரீ மகா கோவிந்த சுவாமிகள், சில அன்பர்கள் வற்-புறுத்தி உங்கள் விருப்பம் போல் நல்ல பணிகளை செய்து வரலாம், உங்களுக்குப் பின் மடத்திற்கு வாரிசு தாங்களே நியமனம் செய்யலாம் என கூறி வேண்டிக்கொண்டார்கள். 1990-ல் டிசம்பர் மாதம் 30-ம் தேதி உயிலும் எழுதி வைத்து விட்டார்கள். மறுபடியும் பாரம் தலையில்

சுமந்தேன். இறைவன் சோதனை போலும், மு. கோ. கிருஷ்ணசுவாமி-ஆழ்ந்த எண்ணமும் திட சங்கல்பமுமே வேலை செய்தது போலும். இடையில் மறுபடியும் வேண்டாமென கூறிவிடலாம் என எண்ணி வந்தேன். சிலர் சமாதானம் செய்து இறைவன் திட்டப்படி நடக்கட்டும், மடம் வீணாகி விடும் எனக் கூறினார்கள். மனசம்மதம் இன்றி சரியென கூறி நிர்வாகம் செய்து வந்தேன்.

30—7—1991-ல் ஸ்ரீ மகா கோவிந்த சுவாமி மகா சமாதி அடைந்ததை முன்னிட்டு முழுமையாக மடாதிபதியாக இருந்து பணி செய்யும் நிலை ஏற்பட்டது. இவையனைத்தும் இறைவன் திட்டமும் ஸ்ரீ மு.கோ. கிருஷ்ணசுவாமி ஆழ்ந்த சங்கல்பத்தின் விளைவே என நினைத்-துக் கொண்டேன். இம மடாலய பணிகளை யாவற்றையும் அபிவிருத்தி செய்தும் முறையாக பணிகள் நடக்கவும் திட்டமிட்டு பணி செய்து வருகிறேன்.

எப் போதும் இம்மடம் சிறப்பாக விளங்கி வரவும் நல்ல பணி-கள் பல செய்யவும் நல்ல ஸ்தாபனத்தில் இருக்கும் ஒரு சந்நியாசியை ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு பிற்கால மடாதிபதியாக நியமிக்கவும் நான் நிவிர்த்தி மார்க்கத்தில் சென்று மானுடப் பிறவியை பயனுள்ள-தாகச் செய்து கொண்டு சாந்தியாக சரீரத்தை விட்டு விலகவும் விரும்புகிறேன். எல்லாம் நன்மைக்கே. எல்லாம் அவன செயல்.

- ஓம்

ஸ்ரீ பால் சுவாமி மடத்தின் பூஜை பணிகள், வரும் சாதுக்களை கவனித்தல சமையல் கூடம் கவனித்தல், பசுக்களை கவனித்தல், போன்ற பணிகளை மிகச் சிறப்பாக சுமார் 30 ஆண்டுகள் சிவநாராயண சுவாமி செய்து வருகிறார்கள். தனது வயதான காலத்திலும் இன்றும் அப் பணியை செய்து கொணடு, இறை நாட்டத்தில் மனதை செலுத்தி வருகிறார்கள்.

சிவதனுஷ்கோடி சுவாமிகள் சுவாமி கிருஷண சுவாமிக்கு உதவியாகவும், மடத்தின் பணிகளையும் சிலகாலம் செய்து வந்தார்கள். அவர்களின் பிறப்பிடம் இராஜபாளையம் பின்னர் சித்தர் மடம் நிர்வாகி-யாக சில காலம் இருந்தார்கள். ஸ்ரீ பால் சுவாமி மடத்தின் அபிவிருத்-தியில் என்றும் நாட்டம் உள்ளவர்.

ஸ்ரீ சங்கர் மடத்தின் பூஜையும், பிற பணிகளை மிகச் சிறப்பாக சுமார் 20 ஆண்டுகளுக்கு மேல் கந்தசாமி ஐயா செய்து வருகிறார்கள். அவர்கள் பிறப்பிடம் இராஜபாளையம் அருகிலுள்ள சத்திரப்பட்டி.

ஸ்ரீ சிவ. நாராயண சுவாமிகள் :

ஸ்ரீ பால் சுவாமி மடம், தஞ்சை.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நான் சென்னையில் திரு-வொற்றியூரில் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் மடத்தில் ஓர் ஆண்டு இருந்து விட்டு செனனை வியாசர் ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமி-கள் மடத்தில் இருந்து வந்தேன். 1960 வரையிலும் அங்கு இருந்தேன். 1960லிருந்து இன்று வரை 1992 தொடர்ந்து தஞ்சை ஸ்ரீ பால்சுவாமி மடத்தில் இருந்து தொண்டாற்றி வருகிறேன்.

சென்னையில் நான் இருந்த காலத்தில் தஞ்சை ஸ்ரீ பால்சுவாமி மடத்தின்மடாதிபதியாக இருந்த ஸ்ரீமு.கோ. கிருஷ்ணசாமி சுவாமிகள் செனனையில் வியாசர்பாடி கரபாத்திர சிவபிரகாச சுவாமிகள் மடத்தில் இருந்து வந்தார்கள். அவ்வப்போது கிருஷ்ண சுவாமி சுவாமிகள் திரு-வொற்றியூர் பட்டிணத்தார் சுவாமிகள் கோயிலுக்கு சுவாமி தரிசனம் செய்ய வருவார்கள். தரிசனம் முடிந்த பிறகு அருகிள் உள்ள ஸ்ரீ ராம-லிங்க சுவாமிகள் மடத்துக்கும் வந்து எங்களையும் பார்த்துவிட்டுப் போவது வழக்கம்.

சென்னை வியாசர்பாடியில் உள்ள ஸ்ரீ கரபாத்திர சிவப்பிரகாச சுவாமிகள் மடத்தில் ஸ்ரீ சுவாமி முக்தானந்தா அவாகள் மடாதிபதி-யாக இருந்து வேதாந்த சாஸ்திரங்களை பாடமாக பொது மக்களுக்கு உபதேசித்து வந்தார்கள். மடத்தில் சுவாமிகளின் சீடர்களாக எட்டு பேர் (வெள்ளாடை துறவிகளாக) இருந்து வந்தார்கள் அவாகளில் ஒருவராக ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகளும் இருந்தார்கள்.

தஞ்சாவூர் ஸ்ரீ பால் சுவாமி மடத்தில் மடாதிபதியாக இருந்த ஸ்ரீ ம. கோ. வாசுதேவ சுவாமிகள் சமாதியான பிறகு ஸ்ரீ சுவாமி முக்-தானந்தா அவர்களின் சீடரும் தன்னுடைய சீடருமாக விளங்கிய ஸ்ரீ மு கோ. கிருஷண சுவாமி அவர்களை சுவாமி முக்தானந்தா அவர்-களின் அனுமதி பெற்று சென்னையினின்று தஞ்சைக்கு அழைத்து வநதார்கள். 1959-ம் ஆண்டு கார்ததிகை பௌர்ணமியில் மு கோ. கிருஷ்ண சுவாமி அவர்களுக்கு காவி உடை தநது சந்நியாச தீட்சை செய்து ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு மடாதிபதியாக நியமித்தார்கள். அன்று முதல் 1989 முடிய ஸ்ரீ பால் சுவாமி மடத்தை சீரும் சிறப்புமாக நடத்தி வந்தார்கள். கடைசி ஆண்டு ஐந்து ஆண்டுகளில் மடத்தில் உள்ள மிகப் பழமையான கட்டிடத்தின் ஒரு பகுதியை புதுப்பித்து கட்டிடம் கட்டியும் சமாதி கோயிலில் சுற்றுப்பிரகாரம் கட்டியும் மடத்தின் பொருளாதாரம் மேம்பாட்டினை ஏற்படுத்தியும் வைத்தார்கள்.

1960-ல் தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்தில் நிகழ்ந்த குரு-பூஜைக்கு நான் வந்திருந்த போது ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமி சுவாமிகள் என்னை ஸ்ரீ பால் சுவாமி மடத்திலேயே தங்கியிருந்து வேலை செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார்கள். அவரது அன்பான வேண்டுகோளுக்கு அடியேனும் அவருக்கு உறுதுணையாக இருநது இன்று வரை பணியாற்றி வருகிறேன்.

நான் சென்னையில் இருந்த காலத்தில் திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்தின் ஸ்தாபகர் ஸ்ரீ மத் சுவாமி சித்பவா-னந்தர் அவர்களும் திருவாரூர் ஸ்ரீ குரு தக்ஷிணாமூர்த்தி சுவாமிகள் மடத்தின் தலைவர் சுவாமி சண்முகானந்தா அவர்களும் சேர்ந்து சென்னை வியாசர்பாடி ஸ்ரீ கரபாத்திர சிவபிரகாச சுவாமிகள் மடத்தில் சொற்பொழிவு செய்வார்கள். பல ஆண்டுகள் அந்த சொற்பொழிவு நிகழ்ந்ததுண்டு. நான் பலமுறை சுவாமி சித்பவானந்தர் அவர்களின் அரிய சொற்பொழிவினை கேட்டிருக்கிறேன்.

ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகள் குரு பக்தியிலும் குரு சகோதரர்கள் மீது உள்ள பக்தியிலும் சிறந்து விளங்கினார்கள். துறவு வாழ்க்கையில் உள்ள ஆசார அனுஷ்டானங்களை மிக சிரத்தையோடு கடைப்பிடித்து வருகிறார்கள். தினசரி அதிகாலை 3-30 மணிக்கு எழுந்து விடுவார்கள். மடத்து காரியங்களை செவ்வனே செய்வார்கள். குருபூஜை நிகழ்ச்சியை சிறப்பான முறையில் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமி சுவாமிகளுடன் சென்னையில் உடன் இருந்த சுவாமி சிவ. நாராயண சுவாமிகள் கன்னியாகுமரி மா-வட்டம் நாகர்கோவில் அருகிலுள்ள 'பரக்கை' எனும் ஊரைச் சார்ந்த-வர்கள் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்-தில் தங்கியிருந்து தன் வாழ்வில் துறவும் தொண்டும் மேற்கொண்டு இன்று வரை சிறப்பாக பணியாற்றி வருகிறார்கள்.

காமராஜர் மாவட்டம் இராஜபாளையம் சத்திரப்பட்டியைச் சார்ந்த திரு கந்தசாமி ஐயா அவர்கள் 15 ஆண்டுகளுக்கு மேலாக ஸ்ரீ பால் சுவாமி மடத்தில் இருந்து வருகிறார்கள். மடத்து பூஜா காரி-யங்களில் சிறப்பாக செய்து வருகிறார்கள். ஸ்ரீ சங்கர மடத்தில் உள்ள சமாதிக் கோயிலில் பூஜை செய்து வருகிறார்கள்.

திரு B. ராஜப்பா அவர்கள்,

முன்னாள் அம்மாப்பேட்டை ப. யூனியன் உதவி தலைவராக இருந்தவர்கள்
வென்னுகுடி கிராமம். பாபநாசம் தாலுகா,
தஞ்சை மாவட்டம்.

சுமார் பத்து ஆண்டு காலம் ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமி சுவாமிகளுடன் நெருங்கி பழகும் வாய்ப்பு கிடைத்தது. நான் வசித்து வரும் கிராமத்திற்கு அருகில் தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு சொந்தமான நிலங்கள் உள்ளது. அதனை விவசாயம் செய்யும் போது சுவாமிகள அங்கு வருவார்கள். அப்போது எனக்கு சுவாமிகளிடம் தொடர்பு ஏற்பட்டது. சுவாமிகள் கிராமத்திலுள்ள ஊர் பெரியவர்களிடத்திலும் பெரிய விவசாயிகளிடத்திலும் விவசாய துறையில் நீண்டகால அனுபவமுடையவர்களிடத்திலும் கலந்து பேசி அவர்களது யோசனையையும் அனுபவங்களையும் கேட்டுக்கொள்வாரகள்.

கிராமத்திலுள்ள கோயில்களுக்கு நல்ல பல திருப்பணிகளை செய்து கொடுத்துள்ளார்கள். தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்தையும் நல்ல முறையில் நிர்வகித்து அபிவிருத்தி செய்துள்ளார்கள். மடத்து நிலங்களை தானே முன்னின்று நேரடி விவசாயம் செய்து மடத்திற்கு வருவாயை பெருக்கி உள்ளார்கள்.

விவசாயத்திலோ தொழிளார்கள் கூலியிலோ குறைகள் காணப்பட்டால் அந்த கிராமத்திலுள்ள பெரியவர்களுடன் கலந்துபேசி முடிவெடுப்பார்கள்.

சாதுக்களில் அவரைப் போன்று சுறுசுறுப்பு உள்ளவராகமற்ற யாரையும் பார்க்க இயலாது. சுவாமிகள் பிறரை கோபமாக பேசி விடுவார்கள். அடுத்த கணம் ஆள் விட்டு அழைத்துவர செய்து சமாதானம் செய்து தனது உள்ளார்ந்த தூய மனநிலையினை வெளிப்படுத்துவார்கள். தனக்கு மற்றவர்களுடன் ஏற்பட்ட தொடர்பினை சுலபத்தில் விட்டுவிட மாட்டார்கள்.

தஞ்சை பாபநாசம் தாலுகாவிலேயே விவசாயத்தில் முதன்மையான விவசாயியாக சுவாமிகள் திகழ்ந்தார்கள் என்பது என்போன்ற பல பெரிய விவசாயிகளின நேரடி அனுபவபூர்வமான கருத்தாகும்.

திரு M. ரங்கராஜன் அவர்கள்,
வெண்ணுகுடி கிராமம்,
தஞ்சை மாவட்டம்.

1960-ஆம் ஆண்டு சுவாமி ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. ஸ்ரீ பால் சுவாமி மடத்தின் நிலங்களை நான் அந்த சமயம் சாகுபடி செய்து வந்தேன்.

சுவாமிகள் சிறந்த சாதுவாகவும் அதே சமயம் நிர்வாகம் செய்வதில் நல்ல அனுபவம் வாய்ந்தவராகவும் இருந்து வநதார்கள்.

ஒரு சமயம் சுவாமிகளுடைய பூர்வாசிரமத்தைச் சார்ந்த ஓர் அம்மையார் தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு வந்தார்கள். ஸ்ரீ மு கோ. கிருஷ்ண சுவாமி மடாதிபதி அவர்களிடம் உதவி பெற நினைத்தார்கள். அதனை கேட்ட சுவாமிகள் அந்த அம்மையாரிடம் ''மடத்து சொத்துக்களையோ, காசு பணத்தையோ கிரகஸ்தர்கள் தங்கள காரியத்திற்கு பயன் படுத்தவோ எடுக்கவோ கூடாது. என்று கண்டிப்புடன் சொல்லி விட்டார்கள். அவர்களுக்கு உணவு மட்டும் கொடுத்து அன்புடன் உபசரித்து அனுப்பிவிட்டார்கள்.

சுவாமிகள் பூர்வாசிரமத்தில் தான் பிறநத குடும்பத்தில் தனக்குக் சேரவேண்டிய பங்கான சொத்துக்களை கொண்டு வந்து கொடுத்தார்கள். அதனைப் பெற்று விவசாயம் நிலம் வாங்கி ஸ்ரீ பால்சுவாமி மடத்திற்கே சேர்த்து விட்டார்கள். மடத்துக்குரிய நிலபுலங்களை, சொத்துக்களை. பராமரிப்பதிலும், காப்பதிலும் கண்ணுங் கருத்துமாய் இருந்தார்கள். அதனை அபிவிருத்தி செய்து மடத்தின் காரியங்களுக்கும் சாதுக்கள் சேவைக்கும் பயன்படும்படி செய்து வந்தார்கள்.

1979-ல் மன்னார்குடியை அடுத்துள்ள திருக்களர் கோ. ஆ. வீர. மடாலயம் பொறுப்பேற்று மடாதிபதியாக இருந்தார்கள். அந்த சமயத்தில் என்னை பலமுறை உடன் அழைத்து கொண்டு திருக்களர் மடத்திற்கு போவார்கள். அந்த மடத்திற்கு சொந்தமாக சுமார் 300 ஏக்கருக்கு மேல் விவசாய பூமி இருந்தது. அந்த நிலங்களை விவசாயம் செய்வதற்கு என்னை நன்கு பயன் படுத்திக் கொண்டார்கள். நானும் பக்தி பூர்வமாக அதனை ஒரு தொண்டு காரியமாகவே செய்துவந்தேன்.

திருக்களர் மடத்திலுள்ள சமாதியையும் கிராமத்தில் உள்ள சிவன் கோயிலையும் நல்ல முறையில் கவனித்து வந்தார்கள். சிவன்

கோயிலில் நின்று போன ஆறுகால பூஜையை (இடையில் நின்று-விட்டது) தொடர்ந்து நடந்து வரும்படி செய்தார்கள். அதற்காக மாதம் 1 கலம் நெல் கொடுத்து வர ஏற்பாடு செய்துள்ளார்கள்.

தன் காலத்திலேயே அவ்வூரில் சிவன் கோயில், மாரியம்மன் கோயில் ஆகிய இரண்டு கோயில்களுக்கும் கும்பாபிஷேகம் செய்து வைத்தார்கள். கோ. ஆ. வீர. மடாலயத்தில் புதிதாக நல்ல கட்டிடம் கட்டிவைத்துள்ளார்கள்.

இம் மடத்திற்கு சொந்தமான எல்லா நிலங்களையும் சுவாமி-களே நேரடி விவசாயம் செய்து வந்தார்கள் ஆறு ஆண்டுகள் திருக்-களர் கோ. ஆ. வீர. மடத்தை சிறப்பான முறையில் நிர்வாகம் செய்து பராமரித்து பிறகு கோவிலூர் மடத்தாரிடம் திரும்ப ஒப்படைத்துவிட்டு தஞ்சையில் ஸ்ரீ பால் சுவாமி மடத்தை தொடர்ந்து நிர்வாகம் செய்து வந்தார்கள்,

திரு R. காசிநாதன் என்பவர் வேதாரண்யம் ஊரைச் சேர்ந்தவர். ஸ்ரீ மு. கோ. கிருஷ்ண சுவாமிகளிடம் பல வருடக்களாக ஊழியம் செய்து வந்தவர். இன்றும் மடத்தில் இருந்து தன்னுடைய உண்மையான ஆர்வத்துடன் கூடிய வேலையை செய்து வருகிறார். சுவாமிகளுக்கு அனுக்கத்துடன் தொண்டனாகவும் இருந்திருக்கிறார் சுவாமிகளுக்கு உடல் நல மில்லாத சமயத்தில் கூடவே இருந்து பல வெளியூர் ஆஸ்பத்திரிகளுக்கும் கொணடு போய் பணிவிடை செய்-திருக்கிறார். ஸ்ரீ பால் சுவாமி மடம் தொடர்ந்து சுவாமிகள் காலத்-திற்குப் பிறகும் சிறப்பாக நடந்துவர வேண்டும் என்ற ஆர்வமுடைய வராக இருக்கின்றார்கள். அதற்காக தன்னால் முடிந்த தொண்டினை செய்தும் வருகிறார்கள்.

சுவாமிகளைப் பற்றி கூறுவதாவது: "ஸ்ரீ பால் சுவாமி மடத்-திற்கு அருகில் ஓர் குளம் இருந்தது. சுவாமிகள் அந்தக் குளத்தினை தூர்த்து மரங்கள் வைத்து வளர்த்து நிலப் பகுதியாக மாற்றி வாழை-தென்னை-மா-பலா போன்ற மரங்கள் நட்டு வளாத்து இன்று சோலை-வனமாக இருக்கிறது.

"தனக்குப் பிறகு ஸ்ரீ பால் சுவாமி மடத்திற்கு மடாதிபதியாக சுவாமி அகிலானந்தா வரவேண்டும், அவர்தான் மடத்தை நன்கு நிர்-வாகம் செய்து நடத்துவார்" என்று அடிக்கடிக் கூறியிருக்கிறார்கள். அவருடைய தூய எண்ணம் இன்று நிறைவேறி உள்ளது. மடமும் இன்று வரை நல்ல முறையில் நடந்து வருகிறது.

திரு. த. ஜவஹர் அவர்கள். B.Sc.,

த/பெ. தக்ஷிணாமூர்த்தி,
120, புலவர் நத்தம். தஞ்சை மாவட்டம்.

எனக்கு தஞ்சை ஸ்ரீ பால் சுவாமி மடத்தின் மடாதிபதி ஸ்ரீ மு கோ. கிருஷ்ண சுவாமி சுவாமிகளை எனது தந்தையார் காலத்திலிருந்து நன்கு தெரியும். 1966-67-ல் புலவர் நத்தம் கிராமத்தில் துறைக்கண்ணு வன்னியர் குமாரர் து. சந்திரவன்னியர் அவர்கள் மடத்து நிலத்தை குத்தகைக்கு சாகுபடி செய்து வந்தார்கள். சுவாமிகளிடம் சந்திர வன்னியர் அடிக்கடி நிலம் சம்பந்தமாக விவகாரம் பண்ணி வந்தார் அந்த சமயம எங்கள கிராமத்திற்கு அடிக்கடி சுவாமிகள் வருவார்கள். சிறியவர்-பெரியவர் என்ற வேறுபாடு காட்டாது எல்லோரிடமும் அன்பு காட்டி பழகுவார்கள். எந்த காரியத்தையும் சுவாமிகள் எங்களுடன் கலந்து ஆலோசித்து செய்வார்கள். புலவர் நத்தத்தில் உள்ள மடத்து நிலத்தை குத்தகைதாரரிடமிருந்து மீட்க கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்திருந்தார்கள். அது சமயம் குத்தகைதாரர் நட்டு இருந்த பயிரை கோர்ட் உத்தரவு வாங்கி சுவாமிகள் அறுவடை செய்தார்கள். அந்த நெருக்கடியான சமயத்தில் நாங்கள் எல்லாரும் இருந்து அறுவடை செய்து கொடுத்தோம்.

அடுத்து 1970-ம் வருட வாக்கில் SMT பஸ் கம்பெனிகாரர்களிடம் வழக்கு நடத்தி கோர்ட் உத்தரவு வாங்கி அவர்களை அப்புறப்படுத்தி மடத்திற்குச் சொந்தமான இடத்தை மீட்டு விட்டார்கள். என்னிடம் தனிப்பட்ட முறையில் மிகுந்த அன்பு காட்டி பழகி வந்தார்கள். 1982-ஆம் ஆண்டு மன்னார் குடியில் இந்துக்கள் மகாநாடு நடந்தபோது பலவிதங்களில் ஆதரவு காட்டி துறவிகள் அனைவரையும் அழைத்து அவர்கள் வழி காட்டுதலுடன் சமயப் பணியையும் சமுதாயப் பணியையும் செய்து வாருங்கள் என்று அறிவுரை வழங்கினார்கள். பல சமயம் என்னை சந்திக்கும் போது மடத்திற்கு ஏன் நீ வருவதில்லை என்று அன்புடன் கேட்பார்கள். சுவாமிகள் வாழ்வு சிறப்பானதாக இருந்தது. அவரது கருத்துக்கள் - ஊக்கம் பலருக்கும் வழிகாட்டியாக இருந்து வருகிறது.

ஸ்ரீ மத் சுவாமி அகிலானந்த அவர்கள்

9-வது மடாதிபதி, ஸ்ரீ பால்சுவாமி மடம், தஞ்சை-8.

வாழ்க்கை வரலாறு சுருக்கம்

பிறப்பு ;

தமிழ் நாட்டின் தென்பகுதியில் உள்ள காமராஜர் மாவட்டத்தில் அமைந்திருக்கும் நீர்வளம், நிலவளம், தொழில்வளம் மிகுந்த நகரமாக விளங்கி வருவது இராஜபாளையம் ஆகும். பல தேசபக்தர்களை உருவாக்கிய சிறப்பினையும் பெற்றது. ஆன்மீக துறையில் அநேக துறவியர்களை தந்த பெருமையும் இந் நகருக்கு உண்டு.

இத்தகைய சிறப்புகள் உடைய இராஜபாளையத்தில் உள்ள புதுப்பாளையம் சிங்கராஜா கோட்டையில் K. V. இராமகிருஷ்ண ராஜா K. V. R. ராமம்மாள் தம்பதிகளுக்கு தமிழ் வருஷம் 1124-ஆனி மாதம் 1-ம் தேதி பகல் 8 மணிக்கு (14—6—49) 3-வது மகனாகப் பிறந்தார்கள். தாய் தந்தையர் குழந்தைக்கு பலராமன் என திருநாமம் சூட்டி மகிழ்ந்தனர். தாயார் துளசி என்றே அழைத்து மகிழ்வார்கள். உடன் பிறந்தோர் ஆண் 3, பெண் 1. பள்ளிக் கல்வியை முடித்த பிறகு விவசாயத்தில் ஈடுபட்டார்கள். அந்துடன் துறவற வாழ்வில் நாட்டம் கொண்டு சாதுக்கள்பலருடன் தொடர்புகொண்டு வாழ்ந்து வந்தார்கள்.

துறவியாதல் :

18—9—1977-ல் துறவு வாழ்வில் தீவிர நாட்டம் ஏற்பட்டு வீட்டை விட்டு வெளியேறி திருச்சி ஜில்லா திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனததில் ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின் அருளாட்சி காலத்தில் சேர்ந்தார்கள். ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின் பெருவாழ்வு பலராமன் அவர்களது உள்ளத்தை பெரிதும் கவர்ந்தது. எனவே தன்னுடைய துறவு வாழ்க்கைக்கு ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்தர் அவர்களை குருவாக ஏற்று அவரை சரணாகதி அடைந்து பிரம்மச்சாரியாக வாழ்ந்து வந்தார்கள். சுமார் பத்து ஆண்டுகள் தபோவனத்தில் பயிற்சி பெற்றார்கள். 8—5—1982ல் சந்நியாசம் பெற்றார்கள். தன் குருநாதர் (ஸ்ரீ மத் சுவாமி சித்பவானந்தர் அவாகள்) தனக்கு சந்நியாச நாமமாக சுவாமி அகிலானந்த எனும் பெயரிட்டார்கள்-பலமுறை வடநாட்டிலுள்ள புனித க்ஷேத்திரங்களை தரிசனம் செய்து வந்தார். பல சம்பிரதாயங்களைச் சேர்ந்த பெரிய மடங்களோடும் மடாதிபதிகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள்.

திருவாடுதுறை ஆதீனம் 23-வது பட்டம் ஸ்ரீலஸ்ரீ சிவப்பிரகாச பரமாச்சாரியரோடு மிக நெருக்கமான பழக்கமும், சகோதரர்களைப் போல் பழகியும், ஆன்மீக கருத்துக்களை கலந்து உரையாடியும் மகிழ்வதுண்டு.

பெங்களூர் கைலாஷ் ஆச்ரமத் தலைவர் ஸ்ரீ மத் திருச்சி சுவாமிகள் என அழைக்கப்படும் ஸ்ரீ சிவரத்தினபுரி சுவாமிகளோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர்.

புனித யாத்திரை :

பாரதத்தின் தென்பகுதியிலுள்ள முக்கிய திருத்தலங்களையும் வடபகுதியிலுள்ள திருத்தலங்களையும் இமய மலையில் உள்ள திருத்தலங்களையும் தரிசனம் செய்துள்ளார்கள். ''புனித கயிலாயம்'' சென்றும் தரிசனம் செய்துள்ளார்கள்.

ஆசிரமம் அமைத்தல் :

சுவாமிகள் 1987-ஆம் ஆண்டு ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனத்திலிருந்து விலகி நெல்லை மாவட்டம் திருக்குற்றாலத்தில் ஐந்தருவி அருகில் சுமார் இரண்டு ஏக்கர் நிலத்தில் ''ஸ்ரீ சுவாமி விவேகானந்த குடீர்'' எனும் ஸ்தாபனம் நிறுவி ஆன்மீகப் பணியும் தேசப்பணியும் சமுதாயப் பணியாக அனாதை மாணவர்களை தேர்ந்தெடுத்து உணவு, உடை. கல்வி ஆகியவற்றை இலவசமாக அளித்துவருகிறார்கள்.

மடாதிபதியாதல் :

தஞ்சை ஸ்ரீ பால்சுவாமி மடத்துடன் சுமார் 15 ஆண்டுகள் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளதால் இம்மடத்தின் மடாதிபதியாக 1991-ல் நியமிக்கப்பட்டார்கள். தற்போது மடத்தில் ஆன்மீக சொற்பொழிவுகளும், பூஜைகளும், அந்தர் யோகமும் முறையாக நடத்தி வருகிறார்கள்.

மேலும் சமுதாயப் பணியாக கிராமக் குழந்தைகளுக்கு பாடநோட்டுப் புத்தகங்கள் வாங்கித் தந்து உதவுகிறார்கள். அவர்கள் செய்யும் பணிக்கு உறுதுணையாக **சுவாமி முக்தானந்தரும் சுவாமி அம்பிகானந்தரும்,** இருந்து வருகிறார்கள். சுவாமிகள் இருவரும் தவத்திரு ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தரின் நேர் சீடர்கள் ஆவர். **சுவாமி ராமகிருஷ்ணானந்தர்** அவர்களும் உடன் இருந்து பணி செய்து வருகிறார்கள்.

ஸ்ரீ பால் சுவாமி மடத்தை சமுதாயத்திற்குப் பயன் படும் வகையில் பல நல்ல பணிகள் செய்ய திட்டமிட்டு உழைத்து வருகிறார்கள். மேலும் பணிகளை விரிவாக்க முயன்று இம் மடத்தை சீரும் சிறப்புமாக நடத்த எல்லாம் வல்ல இறைவன் திருவருளை நாடியுள்ளார்கள். தனக்குப்பின் இம் மடாலயத்தை சிறப்பாக நடத்திவர எண்ணி தற்போதே சிறந்த சாதுவிடம் மடாலயத்தை ஒப்படைக்க ஆவன செய்து வருகிறார்கள். இறைவன் துணை செய்வார் என்ற நம்பிக்கையில் தன்னை விடுவித்துக்கொள்ள திட்டமிட்டு உளளார்கள்.

சுவாமி அகிலானந்த அவர்கள் உயில் மூலம் ஸ்ரீ பால் சுவாமி மடம், ஸ்ரீ சங்கர சுவாமிகள் மடம் இரண்டிற்கும், பின் வாரிசு மடாதிபதியாக ஸ்ரீ சுவாமி சித்பவானந்த அவர்களின் சீடர் **ஸ்ரீ சுவாமி ஆத்மானந்த** (ஆத்மானந்தம்) அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

ஸ்ரீ சுவாமி அகிலானந்த அவர்கள் மேற்கொண்ட புனித யாத்திரைகள்.

1980 - பத்ரிநாத் கேதார், காசி வடநாட்டு ஸ்தலங்கள் - 3 மாதம்

1983 - அமர்நாத், வடநாட்டு ஸ்தலங்கள் - 2 மாதம்

1986 - திருக்கயிலாய யாத்திரை வடநாட்டு ஸ்தலங்கள் - 3 மாதம்

1990 - ராமகர சேவை, அயோத்தி சென்றது - 1 மாதம்

திருநெல்வேலி மாவட்ட ராமகரசேவா தலைவராகப் பொறுப்பேற்று பணி செய்தார்கள்.

உத்திரப்பிரதேசம் அயோத்தி இராமர் கோவில் கரசேவைக்குச் சென்ற போது உத்திரப்பிரதேச அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டார்கள்.

அன்பே தெய்வம்



ஸ்ரீ சுவாமி அகிலானந்த

ஸ்ரீமத் சுவாமி அகிலானந்தர் தலைவராக உள்ள பிற ஸ்தாபனங்கள்

***

ஸ்ரீ சுவாமி விவேகானந்த குடீர்,
ஸ்ரீ சாரதா மாணவர் இல்லம்,
ஐந்தருவி, திருக்குற்றாலம்-627 802.

ஸ்ரீ ராமகிருஷ்ண ஆசிரமம்,
அம்மன் பேட்டை, தஞ்சாவூர்-613 205.

ஸ்ரீ ராமகிருஷ்ண குடீர்,
அம்பாசமுத்திரம்-627 401.

ஸ்ரீ சுவாமி அகிலானந்த அவர்கள் செய்து வரும் சமுதாயப் பணிகள் :

திருநெல்வேலி மாவட்டம், திருக்குற்றாலம் ஐந்தருவி அருகில் 'ஸ்ரீ சாரதா மாணவர் இல்லம்' தொடங்கி அதில் தாய் தந்தையர் அற்ற, வசதியற்ற பத்து ஆண் குழந்தைகளை (வயது 7 முதல் 15 வரை) மட்டும் வளர்த்து வருகிறார்கள். குழந்தைகளுக்கு முற்றிலும் இலவசமாக கல்வி, உடை, உணவு, தங்கும் இடம் அனைத்தும் அளித்து ஆன்மீகப் பயிற்சியும் அளித்து வருகிறார்கள் இதை தெய்வீக தொண்டாக நினைத்து செய்து வருகிறார்கள். இதை மேலும் விரிவு படுத்தவும் சமுதாயத்தில் வசதி குறைவுற்றவர்களுக்கு மருத்துவ வசதி மற்றும் பலவகைகளில் தொண்டு செய்யவும் எண்ணியுள்ளார்கள்.

சுற்றுப்புற கோவில்களில் உழவாரப் பணியை குடீர் மாணவர்கள் மூலம் செய்து வருகிறார்கள்.

"அன்பே தெய்வம்"

ஸ்ரீமத் சுவாமி அகிலானந்த அவர்களின் யாத்ரா அனுபவங்கள், ஸ்தாபன அமைப்பு அனுபவங்கள் ;

1980ல் வடநாட்டுக்குச் செல்ல வேண்டும், ரிஷிகேஷில் 3 மாத காலம் ஜப தியானத்தில் ஈடுபட வேண்டும் என்று அவர்களின் தெய்வீக குருவாகிய சுவாமி சித்பவானந்தர் அவர்களிடம் முதல் முறை கேட்கும் போது சில மாதங்கள் கழித்து சென்று வரலாம் எனக் கூறி தடை விதித்தார்கள். பின் அதன்படி பயணம் செய்ய எண்ணிய- போது மூத்த சாதுக்கள் சென்று அனுமதியை தடை செய்ய முற்பட்- டார்கள். ஆனல் குருவானர், அவர்களின் கூற்றை ஏற்காதுமனப்பூர்வ மான ஆசி வழங்கி அனுப்பினர்கள் அந்த ஆசியின் பலனுக வடநாட்- டில் ஏற்பட்ட பல தடைகள் நீங்கின, அவர்கள் பயணம் முடிந்து தென்- பகுதி திரும்பும் போது கல்கத்தா கௌரா ரயில் நிலையத்தில் பூரி செல்லும் ரயிலில் ஏறிய பின் அவர்கள் பெட்டி களவுபோய் விட்டது. ஆனல் 10 நிமிடம் கழித்து தெய்வக்குரல் போல் ''வெளியே சென்று தேடு'' என சுவாமிஜீயின் மனதில் தோன்றியது. பெரிய ஜனக்கூட்டத்- தில் தேடிய போது நிறைய பெட்டிகளுக்கு நடுவில் சுவாமியின் பெட்டி இருந்தது. பின் சில நாட்கள் கழித்து கயா சென்ருர்கள். அங்கு ஏமா- ற்றுபேர்வழிகள் அவ்வூரில் அதிகம் என கேள்விபட்டது போல் இவர்- களை ரயில் நிலையத்திலிருந்து ரிக்ஷாவில் ஏற்றிக் கொண்டு இடம் மாற்றி அழைத்து சென்று ஓர் வீட்டில் உள்ளே அழைத்துச் சென்று கதவுகளை அடைக்கும் தருவாயில் வெளியே தப்பி ஓடிவந்து தெருவில் நின்று சப்தமிட்டதும், ஏமாற்று பேர்வழிகள் ஓடிவிட்டார்கள். இதுவும் குருவின் ஆசியால் நடந்ததேஎன கூறியுள்ளார்கள் அதேபோல் தென் பகுதில் பொதிகமலை யாத்திரையின் போது கொடிய வனவிலங்கு பகுதியில் ஒரு சிலருடன் யாத்திரை செய்தும் மிருகங்களின் தொல்லை- கள் இன்றி தப்பித்து வந்துள்ளார்கன். பாபநாசம் பாணதீர்த்தம் இஞ்சிக் குழி, நாகபொடை, மேலும் பல குகைகளில் சென்று ஜப தியானம் செய்துள்ளார்கள். அது சமயமும் குருவின் அருள் துணைபுரிந்துள்ளது என்பார்கள்.

திருக்கயிலை யாத்திரையின் போது எனக்கு முற்றிலும் பேரு- தவி செய்த எனது அன்புக்குரிய சகோதர உணர்வுள்ள சாது திருக்- கயிலாயபரம்பரை திருவாவடுதுரை ஆதீன கர்த்தர் (23-வது பட்டம்) ஸ்ரீ சிவப்பிரகாச ஞானதேசிக சுவாமிகள் அவர்களையே சாரும் மேலும் பெங்களூர் கைலாஷ் ஆஸ்ரம தலைவர் ஸ்ரீமத் திருச்சி சுவாமிஜீ அவர்- களையும் சாரும் ஆக திருக்கயிலாய பயணத்திற்கு அதே பெயரைத் தாங்கியுள்ள இரு மடாதிபதிகள் செய்த பணியாகும் என்பார்கள்.

திருவாவடுதுறை ஆதீனகர்த்தர் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக-(23-வது பட்டம்) சுவாமிகளை பற்றி சுவாமிஜீ கூறும்போதெல்லாம் அளவு கடந்த ஆனந்தமும், அவர்களின் குணங்களைப்பற்றி பெருமை-யோடும் கூறி மகிழ்வார்கள். முன் ஜன்மத்தில் இருவரும் சகோதரர்-களாக பிறந்திருப்போம் என கூறுவார்கள். அவர்களின் ஞாபகம் இடையிருது மனதில் கொண்டுள்ளதால் சந்தர்ப்பம் கிடைக்கும் போ-தெல்லாம் அவர்களை பெருமையோடு நினைவு கூறுவார்கள். இது ஓர் அபூர்வமான அன்பின் பிணைப்பு என்பார்கள். அதே அளவு ஆதீனம் அவர்களும் சுவாமிஜீயின் மீதுவைத்துள்ளார்கள்.

சுவாமிஜீயின் ஆன்மீக முன்னேற்றத்திலும் குடீரின் வளர்ச்சி-யிலும் அளவில்லாத ஆர்வத்தை ஆதீன கர்த்தர் அவர்கள் கொண்டுள்-ளார்கள். இது அவர்களின் மேலான அன்பையும், பண்பையும் காட்டு-கிறது.

அன்பிற்கும்ண்டோ அடைக்கும்தாழ், அன்பே தெய்வம் என்பதற்கு ஒப்ப இரு ஆத்ம உள்ளமும் இணைந்து மகிழ்கிறது.

பின் திருக்குற்ருலத்தில் ஸ்ரீ சுவாமி விவேகானந்த குடீர் அமைக்க திட்டமிட்டபின் அதன் பணிகளில் முற்றிலும் ஈடுபடுத்திக் கொண்ட நகரம் காமராஜர் மாவட்டம். இராஜபாளையம், கோவை ஜில்லா ஈரோடு ஆகும் இவவூர் சில அன்பர்கள் நல்ல பணியை செய்து தந்துள்ளார்கள்.

குடீரின் ஆரம்ப காலத்திலேயே தனது சமுதாயப் பணிக்கும், குடீரின் வளர்ச்சிக்கும் சாதுக்களிடம் மட்டும் நன்கொடை கேட்பது என்றும் அன்பர்களிடம் நன்கொடைகேட்பதில்லை என்ற சங்கல்பத்தை செய்து கொண்டார்கள். ஆனுல் அன்பர்கள், பக்தர்கள் விரும்பி தரும் நன்கொடையை மட்டும் ஏற்றுக்கொள்கிருர்கள்.

இறைவன அருளால் இன்று வரை எந்த பெரிய கஷ்டமும் ஏற்படாது பணிகள் நடந்து வருகிறது.

இவ்வாறு இந்த தெய்வப்பணியில் சுவாமிஜீ அவர்களுக்கு உறுதுணையாகவும், ஆசியும் வழங்கிய பெருமை பெரும்பகுதி சாதுக்-களின் பங்குஎன கூறுவார்கள். குடீரின் கட்டிடப்பணி, பிறவளர்ச்சிப்

பணிகளில் தங்களை இரவு பகல் என பாராது உழைத்த அன்பர்களும் சுவாமிஜீயின் சிரமத்தில் 90% பங்கேற்ற அன்பர்கள் K.R. பால்ராஜா, S/o. K. V. ராமகிருஷ்ண ராஜா இராஜபாளையம். M. திருமலையப்பபிள்ளை பிரேமா மெடிக்கல், தென்காசி. K. D. சிவராம ராஜா, S/o. K. V. தேசிங்கு ராஜா, இராஜபாளையம். D. தர்மர், ஆலங்குளம், திருநெல்-வேலிஜில்லா, சின்னு ஆசாரி, இராஜபாளையம், இவர்களே அந்த புனித வேள்வியில் பங்குபெற்று பாக்கியம் அடைந்தவர்கள் என சுவாமிஜீ கூறுவார்கள்.

ஆக தனது யாத்திர காலம். ஸ்தாபன அமைப்புகாலம் போன்ற சோதனை காலங்களில் தெய்வ அனுகூலம், குருதேவர் குருநாதர் ஆசிகள் துணை புரிந்தது எனகூறி பெருமைப்படுவார்கள்.

எல்லாம் நன்மைக்கே எல்லாம் அவன் செயல் என கூறி சுவாமி அவர்கள் தனது பணியில் ஏற்படும் நலம் கேடும் இவ்வளவும் பொருட்படுத்தாது வாழ்ந்து வருகிறுர்கள்.

ஆன்மீகம்
தொண்டு
அன்பு
உழைப்பு

"சிவசிவ என்கிலர் தீவினையாளர்
சிவசிவ என்றிடத் தீவினைமாளும்" -திருமூலர்

"நலம்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன்
நாராயணா என்னும் நாமம்" -ஆழ்வார்

துறவிக்குப் பொருட்பற்று இருக்கலாகாது. அவ்வாறு விரும்பும் துறவி தன் வாழ்வையே சிதைத்துக் கொள்பவனாகிறான்.
-சுவாமி விவேகானந்தர்

மரணம் நம்மை பின்தொடர்கிறது. நாம் பணத்தை பின் தொடர்கிறோம். மிஞ்சுவது மரணம். சாந்தி இல்லை. -துறவி

ஓயாக் கவலையினால் உள்ளுடைந்து வாடாமல்
மாயாப் பிறவி மயக்கறுப்பதெக்காலம்? -பத்திரகிரியார்

அநித்தியத்தை நித்யமென்று ஆதரவா யெண்ணுதே
தனித்திருக்கேன் என்குதே தனைமறக்கேன் என்குதே
-பட்டினத்தார்

அன்புற்று அமர்ந்த வழக்கென்ப வையகத்து
இன்புற்றார் எய்துஞ் சிறப்பு. -திருக்குறள்

ஏதங்கள் அறுத்து எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாயே. -மாணிக்கவாசகர்

பொல்லாத காமப்புலைத் தொழிலில் என்னறிவு
செல்லாமல் நன்னெறியிற் சேருநாள் எந்நாளோ!
-தாயுமானவர்

அகந்தையடங்கி மூல ஆத்மாவில் ஒடுங்குதல் இதன் பொருள். வெளிச்சின்னங்கள் வணக்கங்களால் கடவுளோ குருவோ ஏமாற மாட்டார். அகந்தை இருக்கிறதா இல்லையா என்பதையே கவனிப்பார். -ரமண மகரிஷி

துறவிக்கு வேண்டியது பணமும், பதவியும், கட்டிடமும் அல்ல. ஸத்தியமும், அன்பும், வைராக்கியமும் தான் வேண்டும். -துறவி

உலக வாழ்க்கையில் ஈடுபட்டிருக்கலாம். ஆனுல் அதற்கிடையில் உங்கள் மனதை இறைவன்பால் திருப்ப வேண்டும். இல்லேயேல் உங்கள் வாழ்வு அனர்த்தமாய் போய்விடும்.

-ஸ்ரீ ராமகிருஷ்ணர்

உனக்கு மன அமைதி வேண்டுமானுல் பிறரிடம் குற்றம் காணுதே.

-ஸ்ரீ சாரதா தேவியர்

தியாகமும், பலமும் தான் வாழ்வு. தன்னம்பிக்கை இல்லாதவனே நாஸ்திகன்.

-ஸ்ரீ சுவாமி விவேகானந்தர்

உலக வாழ்வு என்னும் பொய்மானேப் பார்த்-தோடாதிருக்குமாறு இறைவா, நீ அருள் புரிவாயாக.

ஸ்ரீ சுவாமி சித்பவானந்தர்

உங்களிடமுள்ள ஆணவ, அகங்காரத்தை அகற்-றுங்கள் வரட்டு கௌரவத்தால் ஆவதென்ன? மரணம் எந்த க்ஷணமும் உங்களே வந்தடையும். நல்லவர்-களாக வாழ்ந்து வாழ்நாளே பயன்படுத்திக் கொள்ளுங்-கள். எல்லா உயிர்களிடத்தும் அன்பை செலுத்த கற்றுக்கொள்ளுங்கள்.

-துறவி

பற்றற்றுப் பண்புடன் பெருவினேயாற்றுக. ஏனென்ருல் பற்றற்றுப் பணிபுரியும் புருஷனே பெரு நிலேயைப் பெறுகிருன்.

-ஸ்ரீமத் பகவத் கீதை

ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணுத் பூர்ண முதச்யதே
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே.
ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: